விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 11 புதன்கிழமை (24.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 095

MoneyGram
Ria
WESTERN UNION WU

Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1771)

## ஐ.நா மனித உரிமைகள் சபையில்

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெற்றி

### ஆதரவாக 22 நாடுகள் எதிராக 11 நாடுகள்

### இந்தியா உட்பட 14 நாடுகள் நடுநிலைமை

*(ஜெனிவா)*

**இலங்கை உள்நாட்டுப் போரின்போது நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு எதிரான ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமை மன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் வெற்றி பெற்றது.**

**தீர்மானத்துக்கு ஆதரவாக 22 நாடுகள் வாக்களித்தன. 11 நாடுகள் எதிராக வாக்களித்தன. இந்தியா உட்பட 14 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.**

இதன்மூலம் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் உள்ள விடயங்களை வலியுறுத்தும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வரைபு மீதான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தாலும், அது நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

நேற்று (இலங்கை நேரம்) மாலை 4 ➤19

## யாழ்.நகரின் நவீன சந்தையின் ஒரு பகுதி முடக்கம்

### எழுமாற்று பரிசோதனையில் 9 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் நவீன சந்தை (நியூ மாக்கற்) தொகுதியின் ஒரு பகுதியில் எழுமாற்றாக 60 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் ➤19

## ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை

### வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன



(ஜெனிவா)

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானம் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இத ➤19

## யாழில் மாணவர்களுக்கு கொரோனா பயப் பீதியில் பெற்றோர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள சில பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று மோசமாகப் பரவி வருகின்ற நிலையில், யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. ➤19

### கொரோனாவால்

## நல்லூரைச் சேர்ந்த பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கொரோனா தொற்று காரணமாக நேற்று மேலும் ஒரு மரணம் பதிவாகியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள் ➤19

## ஐ.நா தீர்மானத்தால் இலங்கைக்கு குந்தகம்

### இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி சி.ஏ.சந்திரபிரேமா

(கொழும்பு)

இலங்கை தொடர்பான ஐ.நாவின் தீர்மானம் இலங்கைக்கு குந்தகம் ➤19

### தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும்

## இலங்கை விடயத்தில் இந்தியாவுக்கு இரட்டை கடப்பாடுகள் உள்ளது

### ஜெனிவா உரையில் இந்தியா தெரிவிப்பு

(ஜெனிவா)

இலங்கை விடயத்தில் இந்தியாவுக்கு இரட்டைக் கடப்பாடு உள்ளதாக ஜெனிவா தீர்மான வாக்கெடுப்பிற்கு முன்னதான உரையில் இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பில் அந்நாட்டு பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமி ➤19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
### ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம்: 10. கண்டிவீதி. 457. 457A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கந்தையா வேலுப்பிள்ளை என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி கந்தையா வேலுப்பிள்ளையும் பெண் நாகம்மாவும் பிரசித்த நொத்தாரிசு கிருஷ்ணபிள்ளை துரைசிங்கம் முகதாவில் 1957.05.31 ஆம் திகதியிடப்பட்ட 8958 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் மகள் நடேசன் ெபண் அன்னலட்சுமிக்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

பின்னர் 1957.05.31 ஆம் திகதியிடப்பட்ட. பிரசித்த நொத்தாரிசு கிருஷ்ணபிள்ளை துரைசிங்கம் முகதாவில் 8958 ஆம் இலக்கத்தில் 2ஆம் பெயரின் மாதா காலஞ்சென்ற நடேசன் பெண் அன்னலட்சுமி பெயரில் நிறைவேறிய சீதன உறுதிப்படி அவரின் ஏக புதல்வியாகிய 2ஆம் பெயரை வந்தடைந்த மாதாவழி முதுசமும் ஆட்சியுமானது என கண்டிவீதி. பெரியரசடி. சாவகச்சேரி தில்லையம்பலம் சிவானந்தனும் பெண் செல்வறஜனியும் பிரசித்த நொத்தாரிசு மு.சே.இராசையா முகதாவில் 2018.08.01 ஆம் திகதியிடப்பட்ட 8904 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் சிவானந்தன் திருவரங்கனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

**ஆதன விபரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். தென்மராட்சிப்பகுதி. சாவகச்சேரி கோயிற் பற்று. சாவகச்சேரி இறை "கரடிக்குளி வளவும் செல்லாத்தை வளவு 2 பிரிவும்" நிலப்பரப்பு-9.இது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வல்லிபுரம் சிவராசா 06.03.1990 ஆம் திகதியில் அளந்து வரைந்த 976 இலக்க அளவைப் படத்தின்படி நிலப்பரப்பு 9 குழி 4.85. இதற்கு எல்லை..

வடக்கு : சுப்பிரமணியம் ஜெயரூபனுக்குரிய ஆதனம்
கிழக்கு : கண்டிவீதி
தெற்கு : சிவானந்தம் செல்வறஜனிக்குரிய ஆதனம்
மேற்கு : பெரியரசடி ஒழுங்கை

தற்போது சிவானந்தன் திருவரங்கன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின். பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

(6312)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
### ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 9. கண்டுவில் 2ஆம் ஒழுங்கை. 17 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சச்சிதானந்தம் பெண் வசந்தாதேவி என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி தெற்கு. கதிரவேலு செல்லையாவும் பெண் செல்லம்மாவும் பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் கந்தசாமி முகதாவில் 05.06.1968 ஆம் திகதியிடப்பட்ட 2281 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் சிதம்பரநாதர் சச்சிதானந்தம் பெண் வசந்தாதேவி என்பவருக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

பின்னர் சாவகச்சேரி தெற்கு. தற்போது கனடா சச்சிதானந்தம் முகுந்தன் அதே முகவரி பிரபாகரன் பப்ரிஸ்ற் உம் மனைவி சிறோமியும் அதே முகவரி சச்சிதானந்தம் மகள் ஆரணி ஆகியோர் 24.12.2016 ஆம் திகதிய. S. கணபதிப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு அவர்களது அற்றோனித் தத்துவத்தின் பிரகாரம் கண்டுவில் 2ஆம் ஒழுங்கை சாவகச்சேரி எனும் முகவரியைக் கொண்ட தம்பிராஜா இராசமலர் மூலம் பிரசித்த நொத்தாரிசு செல்லையா கணபதிப்பிள்ளை முகதாவில் 21.02.2017 ஆம் திகதியிடப்பட்ட 3751 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் மாதா இறந்த பின்னர் மேற்குறித்த முதலாம், மூன்றாம் நான்காம் பெயர்களின் சொந்தமும் மாதாவழி முதுசொமும் என வெளிப்படுத்தி கண்டுவில் இரண்டாம் ஒழுங்கை சாவகச்சேரியைச் சேர்ந்த கனகசபை உதயகுமாரும் மனைவி மகிந்தாவும் என்பவர்களுக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

**ஆதன விபரம்**

வட மாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். தென்மராட்சிப் பகுதி. சாவகச்சேரி. கோயிற்பற்று. சாவகச்சேரி இறை "அதிகமான்பறுகு" நிலப்பரப்பு (4 1/2) நான்கரை. இது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வல்லிபுரம் சிவராசா அவர்கள் 14.01.2017 ஆம் திகதியில் அளந்து வரைந்த 5447 ஆம் இலக்கப் படத்தின்படி துண்டு 1 எனச் சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு நான்கு (4) குழி பூச்சியம் ஒன்பது தசம் பூச்சியம் பூச்சியம் (09.00). இதற்குள் இருக்கும் பழைய வீடு அடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை.

கிழக்கு : கதிரவேலு செல்லையாவினதும் மனைவி செல்லம்மாவினதும் பிள்ளைகளுக்குரிய மிகுதி ஆதனம்
வடக்கு : சின்னத்தம்பி நடராசலிங்கத்திற்குரிய ஆதனம்
மேற்கு : கதிரவேலு செல்லையாவினதும் மனைவி செல்லம்மாவினதும் பிள்ளைகளுக்குரிய மிகுதி ஆதனம்
தெற்கு : கண்டுவில். 2ஆம் ஒழுங்கை.

தற்போது கனகசபை உதயகுமாரும் மனைவி மகிந்தாவும். இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

(6314)

# மரண அறிவித்தல்



## இராசரத்தினம் பரிமளகாந்தன்

**தோற்றம் : 25.07.1961 மறைவு : 17.03.2021**

*யாழ். மானிப்பாய், உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் நோர்வே OSLO வை வதிவிடமாகவும் கொண்ட இராசரத்தினம் (செல்லப்பா துரைசிங்கம், பேப்பர் ஏஜன்ட்) பரிமளகாந்தன் கடந்த 17.03.2021 (புதன்கிழமை) இறைபதம் எய்தினார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசதுரை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாலரஞ்சினியின் அன்புக் கணவரும் பானுஷா, உஷநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரோஸின் பாசமிகு மாமனாரும் பரிபூராணந்தன், சிவானந்தன், செல்வானந்தன், ஜெயரூபி, சுந்தரலட்சுமி, தயாளினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் பாலச்சந்திரன், பாலபாஸ்கரன், விஜயகுமார், மங்களேஸ்வரி (ராணி), சரோஜினிதேவி (மணி), சந்திரமலர் (வதனி), யோகரஞ்சினி, கா்லஞ்சென்ற சறோசினி, மற்றும் உமாமகேஸ்வரி, உதயகுமார், சந்திரகுமார், வரதலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.03.2021) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியள்வில்* Helsfyn gravelund *இல் நடைபெறும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**பரிபூராணந்தன் - 077 614 4129**
**சிவானந்தன் - 077 983 9429**

(C-1795)

**தகவல்:**
**சகோதரர்கள்**

# குருந்தூர் மலையைச் சுற்றியுள்ள மேலும் 400 ஏக்கர் காணியை பௌத்த பூமியாக்க நடவடிக்கை

## தொல்பொருள் திணைக்களம் அறிவிப்பு

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையைச் சுற்றியுள்ள மேலும் 400 ஏக்கர் காணியை, பௌத்த பூமியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரிற்கு தொல்பொருள் திணைக்களம் எழுத்துமூலமாக அறிவித்துள்ளது.**

குருந்தூர் மலையை சுற்றியுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் அமைந்துள்ள பகுதிகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு எழுத்துமூல அறிவிப்பில் கோரப்பட்டுள்ளது.

குறித்த 400 ஏக்கர் காணியில், சுமார் 150 ஏக்கர் காணி, தண்ணிமுறிப்பு கிராமத்திற்கு உரிய தமிழ் மக்களுடையது என்பதுடன், மிகுதி காணிகள் நாகஞ்சோலை வனப்பகுதியில் உள்ளடங்குவதாக கூறப்படுகிறது.

இந்தக் காணியை தொல்பொருள் திணைக்களத்திற்கு ஒப்படைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் திணைக்களத்திலிருந்தும், கரைதுறைப்பற்று பிரதேச செயலக அதிகாரிகளிற்கு தொடர் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் முதலாம் திகதி முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் இந்த கூட்டத்தில், 400 ஏக்கர் காணியைத் தொல்பொருள் திணைக்களம் கோரிய விடயம் குறித்து ஆராயப்படவுள்ளது. அதன் நிகழ்ச்சி நிரலில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-281)

# இலங்கையில் உள்ளக விவகாரத்தை இந்தியா தேர்தல் பிரசாரமாக்கக் கூடாது

## திஸ்ஸ விதாரண



(கொழும்பு)

இலங்கையின் உள்ளக விவகாரத்தை இந்தியா மாநில தேர்தல் பிரசாரமாக பயன்படுத்திக் கொள்ள கூடாது என லங்கா சம சமாஜ கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

தமிழர் விவகாரம், ஈழம் ஆகிய விடயங்கள் தென்னிந்தியாவின் தேர்தல் மேடைகளில் பிரதான காரணியாக காணப்படுகிறது.

காலம்காலமாக உள்ள பிரச்சினையை இந்தியா தேர்தல் காலத்தில் பயன்படுத்திக் கொள்வது பொருத்தமற்றது.

இலங்கையின் உள்ளக விவகாரத்தை இந்திய தேர்தல் பிரசாரமாக பயன்படுத்திக் கொள்வது தவறாகும்.

விடுதலைப்புலிகள் அமைப்பினரும் யுத்தக் குற்றச்சாட்டுக்களை மேற்கொண்டுள்ளார்கள்.

இவ்விடயம் குறித்து எத்தரப்பினரும் கருத்துரைப்பதில்லை.

பல்லினசமூகம் வாழும் நாட்டில் ஒரு இனத்தின் உரிமைகள் அரசியலமைப்பின் ஊடாக முடக்கப்படும் போது அங்கு பிரிவினைவாதம் தோற்றம் பெறும் என்பதற்கு தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு சிறந்த எடுத்துக்காட்டு. தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு மாத்திரமல்ல அதற்கு முற்பட்ட கால அரசியலமைப்புக்கள் கூட முரண்பட்ட தன்மையிலும் பிற இனத்தின் உரிமைகளை முடக்கும் வகையிலும் காணப்பட்டன என திஸ்ஸ தெரிவித்தார். (நி-4)



சட்டவிரோதமான முறையில் ஹொங்கொங்கிற்கு ஏற்றுமதி செய்வதற்காக கொழும்பு துறைமுகத்தின் சுங்க ஏற்றுமதி பிரிவுக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகை சுறா மீன் துடுப்புகள் இலங்கை சுங்கப் பரிவு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட உலர்ந்த சுறா துடுப்புகளின் மொத்த எடை 250 கிலோ கிராம் என்பதுடன் அவற்றின் பெறுமதி 20 இலட்சம் ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

# சபை அமர்வின் போது சுற்றித் திரிந்த பாராளுமன்ற உறுப்பினர்கள்

## கண்டித்த சபாநாயகர்



(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும்போது உறுப்பினர்கள் சுற்றித் திரிந்ததால் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அமருமாறும் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகியபோது, சில உறுப்பினர்கள் சுற்றி நடப்பதும் மற்றவர்களுடன் கலந்துரையாடுவதுமாக இருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்ற அதிகாரிகளால் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிற்கு அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து அமர்வுகள் நடைபெறும்போது தனித்தனியே கலந்துரையாடலை நடத்த வேண்டாம் என்றும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமருமாறும் சபாநாயகர், பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார். (நி-4)

# தேசிய அடையாள அட்டை ஒருநாள் சேவை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

ஒருநாள் சேவையின் கீழ் தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களம் தெரிவிக்கிறது.

கொரோனா தொற்று அச்சுறுத்தல் காரணமாக ஒரு நாள் சேவையின் கீழ் தேசிய அடையாள அட்டை வழங்கும் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

எனினும், தற்போது அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் வழமைக்கு திரும்பி வருவதால், ஒரு நாள் சேவையின் கீழ் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கான முயற்சியை ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் முன்னெடுக்கவுள்ளது.

தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளும் ஒருவர் பத்தரமுல்லையிலுள்ள தலைமைக் காரியாலயத்துக்கு அல்லது தென் மாகாண காரியாலயத்துக்கு வருகை தருவதாக இருந்தால், திகதி மற்றும் எண்ணை முன்பதிவு செய்வது கட்டாயமாகும்.

இந்தச் சேவையை பிரதேச செயலகத்தின் அடையாள அட்டைப் பிரிவைக் குறிப்பிடுவதன் மூலமோ அல்லது 011 522 6126 அல்லது 011 522 6100 என்ற தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொள்வதன் மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளை, பொதுச் சேவையின் கீழ் தேசிய அடையாள அட்டைகளைப் பெற விரும்பும் நபர்கள், கிராம உத்தியோகத்தர் மூலம் தங்கள் விண்ணப்பங் களை தமக்குரிய பிரதேச செயலகத்தின் தேசிய அடையாள அட்டைப் பிரிவுக்கு சமர்ப்பிக்க முடியும் என ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் திணைக்களத்தால் பெறப்பட்டதும், தேசிய அடையாள அட்டை அச்சிடப்பட்டு பதிவுத் தபாலில் விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# லா லிகா கால்பந்து
# பார்சிலோனா வெற்றி



லா லிகா கால்பந்து போட்டி ஸ்பெயின் நாட்டில் நடந்து வருகிறது. இதில் ஜிபுஸ் கோவில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் முன் னாள் சம்பியனான பார்சி லோனா அணி, ரியல் சோசி டாட்டை எதிர்கொண்டது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணி 6-1 என்ற கோல் கணக்கில் ரியல் சோசிடாட்டை தோற்கடித் தது.

பார்சிலோனா அணியில் லயோனல் மெஸ்சி, செர்ஜினோ டெஸ்ட் தலா 2 கோலும் அன் டோன் கிரிஸ்மேன், ஒஸ் மானி டெம்பிலி தலா ஒரு கோலும் அடித்த னர். இந்த வெற்றியின் மூலம் பார்சி லோனா அணி (62 புள்ளி கள்) நடப்பு சம்பியன் ரியல் மாட்ரிட்டை (60 புள்ளி கள்) பின்னுக்குத் தள்ளி புள்ளி பட்டியலில் 2ஆவது இடத் துக்கு முன்னேறியது. முன் னாள் சம்பியனான அட் லெடிகோ மாட்ரிட் 66 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது.

இந்தப் போட்டியின் மூலம் பார்சி லோனா கிளப் அணியின் கப்டன் லயோ னல் மெஸி (ஆர்ஜென்டினா) புதிய சாதனை படைத்தார். அந்த அணிக்காக அவர் விளையாடிய768ஆவது ஆட்டம்இதுவாகும்.

இதன் மூலம் பார்சிலோனா அணிக் காக அதிக போட்டி களில் ஆடியவர் என்ற பெரு மையை மெஸ்சி தனதாக்கி னார்.

இதற்கு முன்பு ஸ்பெயின் முன்னாள் வீரர் ஸாவி ஹெர்னாண்டஸ் அந்த அணிக்காக 767 ஆட்டங்களில் ஆடியதே அதிகபட்சமாக இருந்தது. (4)



சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தினர் இணைந்து நடத்திய சரஸ்வதி பிறீமியர்லீக் மென்பந்து துடுப்பாட்ட இறுதிச் சுற்றுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தொடர்ந்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு கேடயம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (படம்-சிவகுமாரன்)

# மீண்டும் இவர்கள் வந்தால்
# உலகக் கிண்ணம் இந்தியாவுக்கே
## மைக்கல் வோகன் உறுதி



இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரான மைக்கல் வோகன், இந்திய அணிக்கு உலகக் கிண்ணத்தை வெல்வ தற்கு பெரிய அளவில் வாய்ப்பு இருப்பதாக கூறியுள்ளார்.


இந்தியா-இங்கிலாந்து அணிகளுக் கிடையே நடைபெ ற்று முடிந்த ஐந்து இருபது-20 போட்டிகளில் இந்திய அணி 3-2 என்று தொடரைக் கைப்பற்றி சாதனை படைத்தது.

இருபது-20 போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடத்தில் இருக்கும் இரு அணி களும் மோதிக் கொண்ட இந் தத் தொடர் மிகவும் பரபரப்பாக இருந்தது.


இந்த தொடரில் காயம் காரணமாக ரவீந்திர ஜடேஜா மற் றும் திருமணம் காரணமாக ஜஸ்பிரிட் பும்ரா ஆகியோர் இடம்பெறவில்லை.

இது குறித்து மைக்கல் வாகன் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் இந்தியா இந்தத் தொடரை சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றுள்ளது.

ஒரு சிறந்த அணி இங்கிலாந்து அணியை வீழ்த்தி உள்ளது. பும்ராவும் ஜடேஜாவும் இந்திய அணியில் இணை யும் போது இந்திய சூழ்நிலையில் அவர் கள் உலகக் கிண்ணத்தை வெல்வத ற்கு அது பெரிய அளவில் சாதகமாக இருக்கும் என்று கூறியுள்ளார். (4)



## மரண அறிவித்தல்



### சிதம்பரநாதன் ஸ்ரீகரன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் ஸ்ரீகரன் 21.03.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் - பத்மாவதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி - அருந்தவமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவானியின் அன்புக் கணவரும் சுபோதினியின் பாசமிகு தந்தையும் ஸ்ரீகாந்தன், ஸ்ரீமோகன், ஸ்ரீரஞ்சன், ஞானகௌரி ஆகியோரின் அன்புச் சகோ தரனும் புவனகுமார், உருத்திரகுமார், யோகராசா, ஷாமினி ஆகி யோரின் மைத்துனரும் பாலகரனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (24.03.2021) புதன்கிழமை மு.ப 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் (Sydney, Australia) நடை பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

S.ஸ்ரீகாந்தன்
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை
077 746 3630

பா.தபோதினி
+61451045161
தகவல்
சகோதரர்கள் (C-1796)

S.ஸ்ரீரஞ்சன்
வைரவபுளியங்குளம்,
வவுனியா.
076 536 0978

## மரண அறிவித்தல்
### திருமதி வேவி எலிசபெத் யாக்கோபு



மலர்வு 06.10.1937

உதிர்வு 23.03.2021

மல்வம் உடுவிலைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேவி எலிசபெத் யாக்கோபு நேற்று (23.03.2021) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான மாணிக்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மருதன் யாக்கோபு வின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான மருதன் - பொன்னம்மா தம்பதியரின் மரு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சின்னம்மா, இரத்தினம் மற்றும் ராசம்மா, செல்வம், திரவியம், பொன்னரியம் காலஞ்சென்ற இலாசர், ஞானம் ஆகியோரின் அன்பு சகோதரியும் அருளம்மா (பட்டு), காலஞ்சென்ற மரியதிரேஸ் (கலா), தேவமலர் (மாலா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சந்திரராசா (கிளி), பேரின்பம் செபமாலை, விமலேந்திரநாதன் (குட்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிறோஜினி, மோசி நிலூசா, பஸ்ரியன், யூடித், கீர்த்தனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் வழிபாடு இன்று (24.03.2021) புதன்கிழமை காலை 10 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 926 4559 (C-1797) தகவல்: குடும்பத்தினர்

## குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

சுதர்சன் அகிலாண்டரூபி
கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்

-வழக்காளி-

வழக்கு இல.விஷேடம் / 27/2021

எதிராக
**1)R.E.ஆனந்தராசா**
தலைவர்
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**2)கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,**
பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**3)இ.கி.அமல்ராஜ்**
தெரிவத்தாட்சி அலுவலர்,
நல்லூர் பிரதேச சபை,
தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

-எதிராளிகள்-

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1-3 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1 ஆம் எதிராளி தலைவராகவும் 2 ஆம் எதிராளி பொதுச்செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலுவற்ற, செல்லுபடியற்ற என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ்வழக்கானது 01.04.2021 ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி
2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி

**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(6309)

# கச்சதீவு இலங்கையின் சொத்து இந்தியாவுக்கு தாரைவார்க்க மாட்டோம்

## விமல் வீரவன்ச திட்டவட்டம்

**(கொழும்பு)**

**“யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது. கச்சதீவு ஒப்பந்தத்தில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எக்காரணம் கொண்டும் இந்தத் தீவை இந்தியாவுக்குத் தாரைவார்க்கமாட்டோம்” இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**


இந்தியாவின் மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் வி.கே.சிங், கச்ச தீவை இலங்கையிடமிருந்து மீளப்பெறுவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றோம் என்று அண்மையில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“அன்று இந்தியாவின் ஓர் அங்கமாக இருந்த கச்சதீவை, இந்திய மத்திய அரசு, ஒப்பந்தம் மூலம் இலங்கைக்கு முழுமையாக வழங்கி விட்டது.

இந்தநிலையில், இன்று இந்திய அரசியல்வாதிகள் கச்சதீவை உரிமை கோருவதை நினைக்கும்போது வேடிக்கையாகவுள்ளது.



ஒப்பந்தத்தின்படி கச்சதீவிலுள்ள அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் இருநாட்டு மக்களும் ஒவ்வொரு வருடமும் கலந்துகொள்வார்கள். தமிழக மீனவர்களும் இந்தத் தீவில் தங்கித் திரும்புவார்கள்..

அதற்காக இலங்கையின் சொத்தான கச்சதீவை இந்தியாவுக்கு நாம் தாரைவார்க்க மாட்டோம்.

தமிழக மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடிக்க அனுமதி வழங்க மாட்டோம் என விமல் வீரவன்ச தெரிவித்தார். (ஞ-4)

## குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

**அன்ரனி பனாட்சா பெண் சுபாஜினி**
இல.41/57, செம்மணிவீதி,
செட்டியார் தோட்டம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

-வழக்காளி-

வழக்கு இல.விஷேடம் / 26 / 2021

எதிராக
**1)R.E.ஆனந்தராசா**
தலைவர்
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**2)கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,**
பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**3)இ.கி.அமல்ராஜ்**
தெரிவத்தாட்சி அலுவலர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை,
தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

-எதிராளிகள்-

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1-3 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1 ஆம் எதிராளி தலைவராகவும் 2 ஆம் எதிராளி பொதுச்செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலுவற்ற, செல்லுபடியற்ற என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ்வழக்கானது 01.04.2021 ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி
2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி

**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(6308)

## குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

**பாலசுப்பிரமணியம் பத்மமுரளி**
இல.157.திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்

-வழக்காளி-

வழக்கு இல.விஷேடம் / 24 / 2021

எதிராக
**1)R.E.ஆனந்தராசா**
தலைவர்
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**2)கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,**
பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**3)இ.கி.அமல்ராஜ்**
தெரிவத்தாட்சி அலுவலர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை,
தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

-எதிராளிகள்-

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1-3 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1 ஆம் எதிராளி தலைவராகவும் 2 ஆம் எதிராளி பொதுச்செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலுவற்ற, செல்லுபடியற்ற என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ்வழக்கானது 01.04.2021 ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி
2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி

**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(6307)

## மூக்குக் கண்ணாடி வழங்கல்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாநகர சபை 10 ஆம் வட்டார உறுப்பினர் எம்.எம். நிபாஹிரின் ஏற்பாட்டில் சுல்தான் முஹிதீன் ஜமால் என்பவரின் ஞாபகார்த்தமாக அவரின் குடும்ப உறவுகளின் ஆதரவில் புதிய சோனக தெரு ஜே/88 முதியோர் சங்க உறுப்பினர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 3.30 மணியளவில் ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்க முன்றலில் நடைபெறவுள்ளது. (5-4)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)
இருபாலை தெற்கு கட்டபிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபை பொதுக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.(5-4-136)

# பனை மரம் தறிப்பதனை தடை செய்ய வர்த்தமானியில் அறிவிக்க வேண்டும்

## அமைச்சரிடம் கோரிக்கை

(சாவகச்சேரி)

**பனை மரங்களைத் தறிப்பதனை முற்றாகத் தடை செய்து அந்த அறிவிப்பை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும் என பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரனவிடம் இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க முகாமையாளர் கா.கோபாலகிருஸ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அண்மையில் கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அமைச்சர் விஜயம் மேற்கொண்ட போதே அவரிடம் குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பனை மரம் நிலத்தடி நீரை வற்ற விடாது வைத்திருக்கும் திறன் கொண்டது.


பனை மரங்களைத் தொடர்ச்சியாக பல்வேறு தேவைகளுக்காகவும் தறித்து அழிப்பதனால் நிலத்தடி நீர் வற்றி பாலைவனப் பகுதியாக மாறும் அபாயமுள்ளது.

அத்துடன் பனை வளத்தை நம்பி இருக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

எனவே அரசாங்கம் பனை மரங்களைத் தறிப்பதனை முற்றாகத் தடை செய்து அதனை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும்.

அத்துடன் வீட்டு மரத்தேவை உள்ளிட்ட ஏனைய தேவைகளுக்கு பனை மரத்திற்கு பதிலாக காட்டு மரங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

இவ்வாறான சட்ட நடவடிக்கைகள் மூலமாக பனை வளத்தை பேணி அதனூடாக அதனை நம்பி இருப்பவர்கள் தமது வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்க வழிவகை செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (5-4-30)




யாழ்.இந்துக் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் வருடாந்த மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த இரத்ததான முகாம் நிகழ்வில் கல்லூரியின் மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். (படம்:- ரவிசாந்)

## யோகர் சுவாமி குருபூசை தினம்

(குப்பிழான்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரீகத் துறை நடத்தும் தவத்திரு யோகர் சுவாமிகளின் குருபூசைத் தின நிகழ்வு நாளை 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் இணைய வழியில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி கலாநிதி சுகந்தினி சிறிமுரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ள குறித்த நிகழ்வில் மறப்பேனோ குருநாதன் தன்னை எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா சிறப்புரையாற்றுவார்.(5-4-18)





## நெடுந்தீவுக்கு புதிய பேருந்து



(சாவகச்சேரி)
நெடுந்தீவு மக்களின் கோரிக்கைக்கு அமைவாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் த.ரஜீவ் முயற்சியில் அண்மையில் இ.போ.ச.பேருந்து ஒன்று பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது.

பேருந்தினை நெடுந்தீவு பிரதேச செயலர் சத்தியசோதியிடம் மாவட்ட அமைப்பாளர் கையளித்தார். இந்நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச பெரமுன அமைப்பாளரும் வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரின் வடமாகாண பணிப்பாளருமான பரமேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் வடமாகாண இணைப்பாளர் பாலரமணன், கட்சியின் வலி. கிழக்கு அமைப்பாளர் நடேசன் மற்றும் தென்மராட்சி அமைப்பாளரும் சாவகச்சேரி நகர சபை உறுப்பினருமான சர்வானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (5-4-30)




பிரதேச இளைஞர் சம்மேளனம் மற்றும் ஒன்றுகூடுவோம் அமைப்பு இணைந்து நடத்திய இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கும் தலைமைத்துவப் பயிற்சியும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இப் பயிற்சிநெறி முடிவில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:- கஜிதன்)



சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மந்துவில் மேற்கு பார்ம் இரண்டாம் குறுக்கு வீதி பிரதேச சபை உறுப்பினர் பாரத்பத்மாவின் நிதி ஒதுக்கீடு மூலமாக தார் வீதியாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. (படம்:- சுபேசன்)

# பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிக்க வாய்ப்பு-பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்


(கொழும்பு)

**தற்போதைய வரி மற்றும் விலை திருத்தங்கள் காரணமாக வரவிருக்கும் தமிழ் - சிங்களப் புத்தாண்டு காலத்தில் அனைத்து பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலையும் அதிகரிக்கப்படலாம் என்று அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்த்தன எச்சரித்துள்ளார்.**

இறக்குமதிக்கு கட்டுப்பாடு, அதிகப்படியான வரி மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்பு ஆகியவை விலை உயர்வுக்கு காரணம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு லீற்றர் இறக்குமதி செய்யப்பட்ட பாமெண்ணையின் விலை அதிகரிப்பு காரணமாக பேக்கரி தொழிலை நடத்துவதில் பேக்கரி உரிமையாளர்கள் பெரும் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

ஆகவே பேக்கரி தொழிற்றுறையை சீராக நடத்துவதற்கு பாமெண்ணையின் மீதான இறக்குமதி வரியைக் குறைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.(நி-4)



# மஸ்கெலியாவில் கொவிட் கொத்தணி

(ஹற்றன்)

ஹற்றன் - மஸ்கெலிய பகுதி யில் அமைந்துள்ள இந்து ஆலயமொன்றிலேயே கொவிட் கொத்தணி உருவாகியுள்ளதாக மஸ்கெலிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித் துள்ளது.

ஆலயத்தில் 11 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த கோவிலில் இடம் பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் கடந்த தினம் உயிரிழந்த நிலையில் அவருக்கு கொவிட் -19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

கோவில் பூசகருக்கும் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அவருடன் நெருங்கிப் பழகிய 35 பேர் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இந்த 11 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மஸ்கெலிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித் துள்ளது. (நி-4)

**Invitation for Bids (IFB - 2021/04)**
**Department of Irrigation, Northern Provincial Council.**

பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாணம் அவர்களால் Recurrent நிதி மூலங்களின் 8 எண்ணிக்கையிலான வேலைகளுக்கு தகுந்த ஒப்பந்தகாரரிடமிருந்து மூடிய கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

இக் கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை 20.03.2021 வெளிவந்த Daily News பத்திரிகை பக்கம் 14 இல் பார்வையிடவும்.

**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**

(C-1792)

**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 105 செவ் 1 சூரி 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L, பேக்கரி நடத்துநர்
எதிர்பார்ப்பு: சாதாரண பெண், வெளிநாடு பார்க்கலாம்.
தொ.இ: B/11648

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 1 சூரி 11 இல் உயரம்:170cm
தகைமை/தொழில்: BBA, AAT, MBA, work- Bank (GOV)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில் உள் நாடு மட்டும்.
தொ.இ: B/11650

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 12 1/2 செவ் 2 சூரி 12 இல்
தகைமை/தொழில்: ICT பட்டதாரி, தொழில் ஆசிரியர்
எதிர்பார்ப்பு: தகுந்த பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/11651

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 47 செவ் 5 சூரி 1 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L,University Work- நிலவளவையாளர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/11652

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 24 செவ் 10 சூரி 12 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: மருத்துவபீட மாணவி
எதிர்பார்ப்பு: 40 வருடமாக புத்தளத்தில் சொந்த வீடு வளவு உண்டு, மகளின் படிப்பிற்காக கந்தர்மடத்தில் வசிக்கின்றோம், உள்நாடு மட்டும்
தொ.இ: G/11704

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ், சூரி 6 இல்
தகைமை/தொழில்: A/L, IT, மனித உரிமை ஆணைக்குழு
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (கனடா, லண்டன்.சுவிஸ்)
தொ.இ: G/11708

பிறப்பு: 1978 இந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா: செவ் 4 சூரி 3 இல் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: O/L, தையல்
எதிர்பார்ப்பு: விவாகரத்து ஆனவர், வெளிநாடு முக்கியம்
தொ.இ: G/11712

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 9 செவ் 5 சூரி 3 இல் உயரம்: 9'
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: சிறு அரச உத்தியோகம், சொந்த தொழில், உள்நாடு முக்கியம்.
தொ.இ: G/11713

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

**திருமண வாழ்த்து**

**மணமகன்** **மணமகள்**
**தி.ஜனதன்** **வே.வரஜீவி**



Congratulations

முல்லையின் முன்னாள் அதிபர்
முருகுடைய வேதநாயகனின்
நல்லாள் மூத்த புத்திரி நாமகள் வரஜீவிக்கு
எல்லா வளமுடைய பல்புகழோன் ஜனதன் அவர்கள்
இல்லறங்காணும் வேளையில்
இனிய வாழ்வில்ல வாழ்த்துக்கள்

வாழுவைத்த எம் தெய்வத்தின்
புத்திரியின் வாழ்வு
நீள அகலமாக நிமலனின் ஆசியுடன் சிறக்கும்
வீழ விடாதவாறு புண்ணியம் என்றும் காக்கும்
ஆளுவார்கள் அறிவை,
அன்பை அதுவே எமது ஆசை

மாணவர்கள், பணியாளர்கள், பணிப்பாளர் சபை
இனிய வாழ்வு இல்லம்,
மு/தேவிபுரம்.

(C-1793)



கிருபாகரன் மெரினாவின் அன்பின் ஒளி வெள்ளம் இசைத் தட்டின் முதலாவது இறுவெட்டினை கடந்த ஞாயிற் றுக்கிழமை யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் ஜோசெப்தாஸ் ஜெயரட்ணம் ஆண்டகை வெளியிட்டு வைக்க பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பெற்றுக் கொண்டார். (படம்: தவசீலன்)

# எதிர்கால சந்ததியினை கருத்திற்கொண்டால் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறாது

(முறிகண்டி)

**ஒவ்வொருவரும் தங்களது எதிர்கால சந்ததியினை கருத்தில் கொண்டு செயற்படுவார்கள் எனின் இவ் வாறான காடழிப்பு மணல் அகழ்வு போன்ற சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறாது.**



(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பெரிய வளங்களில் ஒன்றான இரணைமடு குளத்தின் கனகராயன் ஆற்றில் மேற்கொள் ளப்படும் மணல் அகழ்வு எதிர் காலத்தில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் என வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆறுகளை பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சி திட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் இன்று குடிநீருக்கான தட்டுப்பாடு உள்ளது. இதேபோல் வடக்கு மாகாணத்தில் ஏனைய பிரதேசங்களிலும் குடிநீர் தட்டுப்பாடு காணப்புடுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய வளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற இரணைமடு குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்று படுக்கையின் கீழ் தொடர்ச்சியாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுகிறது. இது எதிர்காலத்தில் இந்த நீர்த் தேக்கத்திற்கே பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டார்.

அரச அதிகாரிகள், அரச திணைக்களங்கள், சுற்று நிருபங்களை வைத்துக் கொண்டு கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தி பொலிஸ், இராணுவத்தினரின் பாதுகாப்பினை பயன்படுத்தியும் இதனை கட்டுப்படுத்த முடியும் என்பதை விட, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவரும் தங்களது எதிர்கால சந்ததியினை கருத்தில் கொண்டு செயற்படுவார்கள் எனின் இவ்வாறான காடழிப்பு.மணல் அகழ்வு போன்ற சட்டவிரோத செயற்பாடுகள் இடம் பெறாது. என மேலும் தெரிவித்தார்.

இயற்கையை எமது முன்னோர் எவ்வாறு எம்மிடம் கையளித்தார்களோ அதேபோன்றும் எமது அடுத்த சந்ததியிடம் நாம் கையளிக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.(5-4-100)

# குற்றச்செயல்களை குறைக்க சீ.சீ.ரி.வி. பொருத்தல்

(நெளுக்குளம்)

வவுனியா நகரில் இடம் பெற்று வரும் குற்றச்செயல்களை தடுப்பதற்கு நகரின் முக்கிய சந்திகளில் சீ.சீ.ரி.வி. கமரா பொருத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது

வவுனியா நகரில் இடம் பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நடவடிக்கையில் நகரில் காணப்படும் முக்கிய சந்திகளில் முதற்கட்டமாக சீ.சீ. ரி.வி.கமரா பொருத்தும் நடவடிக்கை வவுனியா வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் வர்த்தகர்களின் பங்களிப்பில் இடம்பெற்று வருகிறது.

அத்துடன் வவுனியா தலைமைப் பொலிஸாரின் 24 மணி நேரக் கண்காணிப்பில் குறித்த கமராக்கள் அனைத்தும் கண்காணிப்படுவதற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வர்த்தக நிலையங்கள், நகருக்கு வரும் பயணிகளின் நன்மை கருதியும் நகரில் இடம்பெறும் குற்றச் செயல்களை தடுக்கவுமே இந் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# நிவர்த்தி செய்யப்படாத பாடசாலை கட்டடங்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் சுமார் 730 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

இப்பாடசாலையில் காண்ப்படுகின்ற இட நெருக்கடி காரணமாக ஆரம்பிக்கப்பட்ட கட்டட வேலைகள் அரைகுறையாகக் காணப்படுகின்றன.

இது தொடர்பாக கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாடசாலையில் கட்டடங்கள் அரைகுறையாகக் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்ட போது கூட்டத்தில் இணைத் தலைவர்களில் ஒருவரான வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சாள்ஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

இக்கட்டடங்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் இந்திய அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டன.

இது தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிக அலுவலகத்துடன் பேச வேண்டும். மாகாண நிதியில் இருந்து இக் கட்டடங்கள் அமைக்கப் பட்டிருந்தால் ஏதாவது முயற்சிகள் செய்திருக்கலாம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை மத்திய அரசின் புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் இப்பாடசாலையில் கட்டடப் பணிகளைத் தொடங்கி அதுவும் அத்திபாரத்துடன் கட்டடம் உள்ளது.

ஒரு பாடசாலையில் இவ்வாறான கட்டடங்கள் ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையாகக் காணப்படுகிறது.

இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்கள் கட்டடத்தினை முழுமைப்படுத்துவதற்கு நிதியினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பது பாடசாலையின் பெற்றோர்களின் வேண்டுதலாகக் காணப் படுகின்றது. (5-350)

# அனுமதியின்றி அரச காணி துப்புரவு மக்களின் முயற்சியால் நிறுத்தம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் அனுமதியின்றி சிலர் அரச காணி துப்புரவு செய்யப்பட்டமை தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் கிராம உத்தியோகத்தர் ஊடாக குறித்த துப்புரவுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக வளாகத்திற்கு முன்பாக உள்ள பொன்னகர் மத்தியில் அமைந்துள்ள சுமார் 3 ஏக்கர் வரையான அரச காணியை ஆக்கிரமிக்கும் நோக்கில் துப்புரவு பணிகளை முன்னெடுத்தனர்.

இதனை அவதானித்த ஊர் மக்கள் கிராம உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியதுடன் தமது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

குறித்த கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொந்தக்காணிகள் இன்றியும் வாழ்வதற்கான வீடுகள் இல்லாமலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்ற நிலையில் தமது பகுதிகளில் வசிக்காத மேற்படி நபர்கள் காணிகளை அபகரிக்கும் நோக்கில் ஈடுபட்டனர் என்றும் குறித்த பிரதேச மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச செயலாளரிடம் வினவிய போது,

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் பொதுத் தேவைக்கு ஒதுக்கப்பட்ட காணியினை வெளியிடத்திலிருந்து வந்தவர்களால் துப்புரவு செய்யப்பட்டமை தொடர்பில் பிரதேச மக்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோரால் முறைப்பாடுகள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

குறித்த காணியில் மேற்கொள்ளப்பட்ட துப்புரவுப்பணியை கிராம உத்தியோகத்தர் மூலம் உடனடியாக தடுத்து நிறுத்தப் பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்ததுடன் பொன்னகர் பிரதேசத்தில் வசிக்கும் காணிகளற்ற குடும்பங்களின் விபரங்களை சேகரித்து பிரதேச செயலர் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கிராம உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (5-4-315)



மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் "ஆறுகளை காத்திடுவோம்" தேசிய வேலைத்திட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ், யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குத் தலைவரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவருமான அங்கஜன் இராமநாதன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண் டனர். இதன்போது அன்றைய நாளின் நினைவாக "ரை" ஆற்று பகுதியில் மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (படம்: சப்தசங்கரி)

# இராசிபலன்

24.03.2021
பங்குனி 11, புதன்கிழமை,
தசமி காலை 6.53 மணிவரை
பூசம் முன்னிரவு 8.00 மணிவரை
சுபநேரம் 4.46-6.16 மணிவரை
இராகுகாலம் 12.16-1.46 மணிவரை
சந்திராஷ்டமம்: மூலம், பூராடம்

வளவன்


மேஷம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


ரிஷபம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,அரசு வழியில் அனுகூல முண்டு,நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மிதுனம்

உறவினர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம்,, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கடகம்

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர் கள்,தொழில் நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசனசுகமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.


சிம்மம்

திடீரென கேட்கும் செய்திகளால் திகைப் படையலாம்,தொழிலில் ஆக்க பூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.


கன்னி

வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய் வீர்கள், குடும்பத்தில் உங்களின் செல் வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


துலாம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், எதிர்பாராத தன வரவுகள் இடம் பெறலாம்.


விருச்சிகம்

வியக்கும் செய்திகள் வந்து சேர லாம்,முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


தனுசு

திட்டமிட்ட காரியங்களில் சிறுதடை தாமதங்களைச் சந்திக்க நேரிடலாம், பயணத்தால் மன உளைச்சல் ஏற்பட லாம்,காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள்.


மகரம்

மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கும்பம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுப வர்களை இனம் கண்டு கொள்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உடல் நலன் சீராகி உற்சாக மடைவீர்கள்.


மீனம்

அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண் பீர்கள்.

அளவறிந்து உண்டால் ஆரோக்கியமாய் வாழலாம்.

# தலவாக்கலையில் முச்சக்கரவண்டி விபத்து

## யுவதி உயிரிழப்பு

(கொழும்பு)

தலவாக்கலை -சென். கிளயார் - டெவோன் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் யுவதியொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை 5.20 மணியளவில் இடம் பெற்றது. லொறியொன்றும், முச்சக்கரவண்டியொன்றும் மோதுண்டே இந்த விபத்து இடம் பெற்றதாக திம்புள்ளை-பத்தனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ளை-பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)



# 550 மில்லியன் பெறுமதியான முகக்கவச உற்பத்தி இயந்திரங்கள்

## இலங்கைக்கு வழங்கியது சீனா

(கொழும்பு)

சீனாவின் டி.எம்.ஐ. தொழில்துறை குழுமத்தால் இலங்கைக்கு 30 செட் தானியங்கி முகக் கவச உற்பத்தி இயந்திரங்களை நேற்று முன்தினம் நன்கொடையாக அளித்துள்ளது என்று இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 60 முகக்கவசங்களை தயாரிக்க பயன்படுத்தப்படும் அதி நவீன இயந்திரங்களையும் (ear-belt spot-welder)நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த நன்கொடைகளின் பெறுமதி 550 மில்லியன் ரூபாவாகும். (நி-4)



# அழகுசாதனப் பொருட்களின் இறக்குமதியை கட்டுப்படுத்த திட்டம்- நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

அழகுசாதனப் பொருட்களின் இறக்குமதியை முறையாகக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி முடிவொன்றை எட்ட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதன பொருட்கள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸாமில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அழகுசாதனப் பொருட்களின் இறக்குமதி கடந்த சில ஆண்டுகளில் 100 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் மொஹமட் முஸாமில் சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில் ஒரு தரத்திற்கு ஏற்ப குறித்த பொருட்களை இறக்குமதி செய்வது குறித்து சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் முறையான திட்டம் செயற்படுத்தப்படும் என


நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டார். (நி-4)

# 24 மணி நேரத்தில் 21 விமானங்கள்

(கொழும்பு)

24 மணி நேரத்தில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 21 விமானங்கள் தரையிறங்கியும் வெளிச் சென்றும் உள்ளதாக பயணிகள் நாட்டுக்கு வந்தும் நாட்டிலிருந்து வெளிச்சென்றும் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி 12 விமானங்கள் தரையிறங்கியுள்ளன. இதன் மூலம் 637 பயணிகள் வருகை தந்துள்ளனர். இதில் 84 பேர் பஹ்ரைனிலிருந்தும் 83 பேர் ஐக்கிய இராச்சியத்திலிருந்தும் வருகை தந்துள்ளனர்.இவ்வாறு வருகை தந்த அனைவரும் தனிமைப்படுத்தல் சுற்றுலா ஹோட்டல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.இதேவேளை 623 பயணிகள் 9 விமானங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளிச் சென்றுள்ளனர். (நி-4)




# யார் அழகு?

பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக் காலில் வைத்து விட்டு அழகிப்போட்டிக்குசென்றது. அழகிப் போட்டி தொடங்கியது.

குறித்த நேரத்திற்கு முயல் மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத் தொடங்கின.

“அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண்போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப் பெண்கள் கொடுப்பேன்! இதற்குத்தான் அதிக மதிப்பெண்கள் ஒதுக்கி இருக்கிறேன்!” காகம் கூறியதும் குருவிக்கு உதவாத மூன் றும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. அப்பொழுது அரக்கப் பரக்க முயல் ஓடி வந்தது.

“முயல்தான் அழகு ராணி! இதை அழகு ராணியாகத் தேர்வு செய்வதற்காக நான் பெருமைப்படுகிறேன்! குருவி என் நண்பன்தான்! ஒரு ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன்பு தான் குருவி கூறி யது.


அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது பற்றியும் சொல்லி வருத்தப்பட்டது! உதவும் நல்ல மனசு உள்ளவர்கள் தான் உண்மையில் அழகானவர்கள்!” காகம் கூறியதும்எலி, வெட்டுக்கிளி, குரங்கு ஆகியவற்றின் முகங்கள் அஷ்ட கோணலாகின.



நீதி : நாம் யாருக்காவது உதவி செய்தால் அது ஒருநாள் நமக்கு எதிர் பாராத பயனைத்தரும்.

(முற்றும்)

# மகாபாரதம்




அருச்சுனனும் கண்ணனும் செய்யும் உதவிக்கு கைமாற்றாக எதுவும் ஏற்பதில்லை என்றனர்.

மயன் யுதிஷ்டிரரை அணுகி “தான் ஒரு அசுர சிற்பி என்றும் தன்னால் உலகமே வியக்கும் ஒரு சபையை நிறுவ முடியும் என்றும் அதை இந்திரபிரஸ்தத்தில் அமைக்க அனுமதி தர வேண்டும் என்றும் வேண்டினான், அனுமதி கிடைத்தது.

மயன் இமயமலைக்கு அப்பால் சென்று பொன்னையும், மணியையும் இரத்தினங்களையும் கொண்டு வந்து சபா மண்டபம் அமைத்தான்.

சுவர்களும், தூண்களும் தங்கத்தால் அமைக்கப்பட்டன. அவற்றுள் இரத்தினங்கள் பதிக்கப்பெற்றன. பளிங்குகற்களால் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டன. தடாகங்களில் தங்கத்தாமரை மலர்கள் சுற்றிலும் செய்குன்றுகளும் நீர்வீழ்ச்சிகளும் காணப்பட்டன.

தரை இருக்குமிடம், நீரிருக்குமிடம் போலவும் நீர் இருக்குமிடம் தரை போலவும் அமைத்திருந்தான். பார்த் தவர்கள் அனைவரும் வியந்தனர். அம்மண்ட பத்தை பார்வையிட்ட நாரதர் “மூவுலகிலும் இதற்கு இணையான மண்டபத்தை பார்க்கவில்லை” என்றார்.

மேலும் யுதிஷ்டிரரிடம் இராஜசூய யாகம் செய்யச் சொன்னார்.

(தொடரும்)

**மயாசுரன் (மயன்)**

இந்து தொன்மவியலில் மயா அல்லது மயாசுரன் என்பவன் புவியில் அசுர, தைத்ய மற்றும் இராட்சத இனங்களின் மாபெரும் அரசனாவான். பாதாள உலகின் மாபெரும் கட்டடக் கலைஞன். மயாசுரன் தனதாட்சியில் மூன்று பறக்கும் நகரங்களை வடிவமைத்து ஆண்டு வந்தான். அவை திரிபுரம் என அழைக்கப்பட்டது. திரிபுரம் செல்வச் செழிப்பில், அதிகாரத்தில் ஏழுலகிலும் சிறந்து விளங்கியது.

ஆயினும் அவனது அட்டூழியங்களுக்காக அவனுக்கு வரமருளிய சிவபெருமானே அவனுடன் போரிட்டு திரிபுரம் எரித்தார். ஆயினும் திரிபுரமெரித்த சிவனே ஐங்கரனை நினைக்காதமையால் அவரது தேரச்சு முறிந்தது. அவ்விடமே அச்சிறுப்பாக்கம் என வழங்கப்படலாயிற்று. மாயா ராஷ்ட்ரா என்ற் தனது தலைநகரைக் கட்டினான். இராவணனின் அழகிய மனைவி மண்டோதரியின் தந்தையாவான்.

காந்தவ காடு பற்றியெரிந்தபோது தன்னைக் கிருஷ்ணரும் அருச்சுனனும் காப்பாற்றியதற்கு நன்றி தெரிவிக்குமுகமாக, பாண்டவர்கள் ஆட்சியில் தர்ம மகாராசனுக்கு இந்திரப்பிரஸ்தத்தில் சிறப்புமிக்க அரண்மனை ஒன்று கட்டிக் கொடுக்கிறான்.

மாயாசபை என பலராலும் புகழப்படும் இந்த அரண்மனையிலேயே நிலத்தை நீரென்றும் நீரை நிலமென்றும் தடுமாறும் துரியோதனனை கண்டு திரௌபதி சிரித்த நிகழ்ச்சி நடந்தது.

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# பேய்விரட்டி/பெருந்தும்பை




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name - Anisomeles malabarica**
**Family - Labiatae**

பல்லாண்டு காலம் வளரக்கூடிய பெரிய செடி இனமாகும். 60 – 120 செ.மீ.உயரம் வரை வளரக்கூடியது. நாற்சதுரமான ரோம அமைப்புகளைக் கொண்ட தண்டுகளைக் கொண்டது. இலைகள் தனியிலை எதிரிலை அடுக்கம் கொண்டவை. இலைகளின் அமைப்பைக் கொண்டு இரண்டு விதமான ஒற்றைபேய் விரட்டி, இரட்டை பேய்விரட்டி என இரு விதமாகக் கொள்ளப்படுகிறது.

ஒற்றைப் பேய் விரட்டியில் இலைகள் கோளவடிவினதாகவும் இரட்டை பேய்விரட்டியில் வேலுருவான இலைகளையும் கொண்டிருக்கும்.

வறட்சியை தாங்கி வளரக் கூடியது. மலர்கள் கொத்துக் கொத்தாக ஊதா நிறமுடையதாகவும் காணப்படும். அஷ்டகர்ம மூலிகைகளில் ஒன்றாகும். திருஷ்டிக்கு பயன்படும் மூலிகையுமாகும்.



ஒற்றை பேய்விரட்டி



இரட்டை பேய்விரட்டி

நீளமான வேலுருவான இலைகளைக் கொண்டதை ஆண் பேய்விரட்டி என்றும் சிறிய கோளவடிவ இலைகளைக் கொண்டதை பெண் பேய்விரட்டி என்றும் பிரிக்கப்படுகிறது. ஆண்களுக்கு ஏற்படும் நோய்நிலைமைகளுக்கு பெண் பேய்விரட்டியையும் பெண்களுக்கு ஏற்படும் நோய் நிலைமைகளுக்கு ஆண் பேய் விரட்டியையும் பயன்படுத்த வேண்டும்.

கசப்பு சுவையுடையது. குடல் வாயுவை அகற்றக்கூடியது. சுரத்தை (காய்ச்சலை) தணிக்கக்கூடியது. வியர்வை பெருக்கக் கூடியது. இதனை வெதுப்படக்கி எனவும் அழைப்பர். கரப்பான் போன்ற தோல் நோய்களை நீக்கக் கூடியது.

இதன்பூக்களை சேகரித்து பசுவின் பாலுடன் சேர்த்து காய்ச்சி பருகிவர தாதுக்களுக்கு பலத்தைக் கொடுக்கக் கூடியது.

இதன் இலைகளைச் சேகரித்து நன்கு கழுவி சிறுசிறு துண்டுகளாக வெட்டி ஒரு பங்கு இலைகளுக்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்கை சுண்டக்காய்ச்சி 50 மில்லி காலை, மாலை கொடுக்க சளி, இருமல், சீத சுரம் போன்றன அகலும்.

இதன் இலைகளைச் சேகரித்து நசுக்கி நொச்சி இலைகளையும் சேர்த்து கொதிக்க வைத்து அதிலிருந்து எழும் ஆவியை (வேதுபிடிக்க) முகர்ந்துவர தலைவலி, பீனிசம், தலைப்பாரம்போன்றன நீங்கும்.

இதனுடைய இலைச்சாற்றில் 5 துளியை வெந்நீருடன் கலந்துகொடுக்க குழந்தைகட்கு பல் முளைக்கும் போது ஏற்படும் வலி குறையும். இதனுடைய இலைகளையும் நெற்பொரியையும் சேர்த்து குடிநீர் காய்ச்சி 20 மில்லி அளவு 4 மணிக்கு ஒரு தடவை எடுத்துவர வயிற்றோட்டம் குணமாகும்.

10 கிராம் மிளகு
5 கிராம் ஓமம்

5 கிராம் பேய்விரட்டி இலைகளை ஒரு மண் சட்டியில் போட்டு கருக வறுத்து 150 மில்லி நீர் விட்டு சுண்டக்காய்ச்சி 15 மில்லி அளவு 5 மில்லி அளவு தேன் கலந்து காலை, மதியம், மாலை கொடுத்துவர குழந்தைகட்கு ஏற்படும் மாந்தம் நீங்கும்.

பேய்விரட்டி முழுச்செடியையும்சேகரித்து அதேயளவுமிளகு, சின்னச்சீரகம் சேர்த்து மண்சட்டியில் இட்டு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி குழந்தைகட்கு 15 மில்லியும் பெரியவர்கட்கு 30 மில்லியும் கொடுக்க மாந்தம், சுரம், பசியின்மை, வயிற்றுப்போக்கு, வயிற்றுப்பொருமல் ஆகியன நீங்கும்.

ஒரு புது அகலை எடுத்து அதில் வேப்பெண்ணெய் விட்டு பேய்விரட்டி இலை ஒன்றை எடுத்து உலர்த்தி திரிபோல உருட்டி அகலில் வைத்துக் கொளுத்திவர கொசுக்களை / நுளம்புகளை விரட்டும்.

அல்லது இலைகளைச் சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து தணலில் போட்டு புகையூட்ட நுளம்புகளை விரட்டும்.

அத்துடன் புதுஅகலைஎடுத்து இலுப்பெண்ணெய்விட்டு பேய்விரட்டி. இலை ஒன்றை உலர்த்தி திரிபோல திரித்து அகலில் இட்டு பௌர்ணமி அன்று விளக்கு ஏற்ற தீயசக்திகளை விரட்டும் என்பது முன்னோர்களின் ஐதீகம். இதனால்தான் பேய்விரட்டி என கிராமமக்களால் பெருந்தும்பை அழைக்கப்படுகிறது.

சந்தனக்கட்டை
சாம்பிராணி
அகில்
துளசிப்பொடி
பெருந்தும்பைப்பொடி
வலம்புரிக்காய்
இடம்புரிக்காய்
வெள்ளைக்குங்கிலியம்
நாய்கடுகு
வெண்கடுகு
மருதாணிவிதை
வெட்டிவேர்

இவை ஒவ்வொன்றையும் ஒரேயளவாக எடுத்து உலர்த்தி, பொடித்து சாம்பிராணித் தூள் போல் பயன்படுத்திவர நுளம்புகளை விரட்டும். வாரத்திற்கு 2 நாட்கள் மூலிகைத் தூபபொடியாக பயன்படுத்தலாம். அசுத்தமான வளியைத் தூய்மைப்படுத்தக் கூடியது.

விஷங்கள்தீண்டினால்பெரிய இலையாக பெருந்தும்பைச் செடியிலிருந்து பிடுங்கி 3 மிளகு சேர்த்து பாதி வெற்றிலையும் சேர்த்து வாயில்போட்டு மென்று சாப்பிட விஷக்குறி, குணங்கள் குறைய ஆரம்பிக்கும்.

புராதன காலத்தில் இதன் இலையைத்தான் திரியாகப் பயன்படுத்தினார்கள். சித்தர்கள் என்னென்ன மூலிகைகளை இல்லங்களில் வளர்க்கலாம் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள். இதனடிப்படையில் பேய்விரட்டி மூலிகையும் இல்லங்களில் கட்டாயமாக வளர்க்கக்கூடிய மூலிகையாகும்.



இந்த மூலிகைகளுக்கு இப் பேய்விரட்டி வேரை இரவில் இல்லங்களில் வைக்கும் போது மனிதர்களுக்கு ஏற்படும் எதிர் மறையான எண்ணங்களை நீக்கி Positive Energy இனைக் கொடுக்கக் கூடியது. நல்ல உறக்கத்தையும் ஏற்படுத்தும்.

பெருமாளுக்கு உகந்த மூலியாகும். குபேர மூலி எனவும் அழைக்கப்படுகிறது. இதனை விதைகள் மூலமாகவும் தண்டுகள் மூலமாகவும் இனவிருத்தி செய்யலாம். இதன் முழுச் செடியிலும் டனின், கிளுக்கோசைட்டு, அல்கலொட்டு, நிரம்பாத கொழுப்பமிலங்கள் போன்ற முக்கிய வேதியற்பொருட்கள் காணப்படுகின்றன. இதன் முழுச் செடியுமே மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஒரு சுத்தமான அகலை எடுத்து,

பசுநெய்
தேங்காய் எண்ணெய்
ஆமணக்கெண்ணெய்
இலுப்பெண்ணெய்

நல்லெண்ணெய் எல்லாவற்றையும் கலந்து அகலில் இட்டு, அதில் ஒரு நீளமான இரட்டைப்பேய்விரட்டிஇலையை எடுத்து திரிபோல உருட்டி அகலில் வைத்து தீபமூட்ட வீட்டிலுள்ள நுளம்புகள், கொசுக்கள் எல்லாவற்றையும் விரட்டுவதுடன் இதிலிருந்து வெளிப்படும் புகையானது வளி மாசடைதலையும் தடுக்கக் கூடியதுமாகும்.

இந்த மூலிகைக்கு கிருமி நாசினி செய்கையுண்டும். இதன் இலைச்சாற்றை பூசிக் குளிக்க தோலில் ஏற்படும் நமைச்சல், எரிச்சல் போன்றவை நீங்கும்.


பேய்விரட்டி வேரை சேகரித்து குழந்தைகட்கு கையில் குளிசமாகக் கட்டி அந்த வேரை வாயில் குழந்தை உமிழ்ந்து வந்தால் குழந்தைகட்கு ஏற்படும் வயிற்றுவலி நீங்கும்.

தண்டுத்துண்டங்கள்மூலம் இதனை இனவிருத்தி செய்யும்போது இரண்டு வாரங்கள் தண்டுத் துண்டங்களை மணல் மண்ணில் புதைத்து வைத்து பின்பு எடுத்து நடும் போது இலகுவில் வளர ஆரம்பிக்கும்.

பேய்விரட்டி இலைகளைச் சேகரித்து இடித்துச் சாறு எடுத்து 400 மில்லி சாற்றிற்கு 400 மில்லி தேங்காய் எண்ணெய் சேர்த்து இரண்டையும் கலந்து அடுப்பேற்றி சிறுதீயாக எரித்து தைலபக்குவத்தில் இறக்கி ஆறவிட்டு குப்பி வடைத்து தலைக்கு பூசிவர பீனிசம், தும்மல், தலைப்பாரம் ஆகியன நீங்கும்.

# பசறை விபத்து விசாரணை

## ஜி.பி.எஸ். பயன்படுத்தப்படவில்லை



(பதுளை)

பசறை - 13ஆம் கட்டைப் பகுதியில் நடந்த பாரிய விபத்து தொடர்பில் விசாரணைகள் நடைபெறும் நிலையில் குறித்த பேருந்து தொடர்பில் தகவல் வெளியாகி உள்ளது.

குறித்த பேருந்து தேசிய போக்குவரத்து ஆணை யத்தால் (என்.டி.சி) கண்காணிக்கப்படும் ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தை பயன்படுத்தவில்லை என்று தேசிய போக்குவரத்து ஆணையத்தின் இயக்குநர் ஜெனரல் நிலான் மிரண்டா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அந்த பேருந்து ஜி.பி.எஸ் தொழில்நுட்ப சிம் கார்ட்டை பெற்றாலும் அதைச் செயற்படுத்தத் தவறிவிட்டதாகவும், எனவே பேருந்து தமது கட்டமைப்புக்குள் இணைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நீண்ட தூர சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் வேகத்தையும் பாதையையும் கண்காணிக்க வடிவமைக்கப்பட்ட தொழில்நுட்பமே ஜி.பி.எஸ்.தொழில்நுட்பமாகும்.

இதில் 3069 பேருந்துகளில் 1168 பேருந்துகள் மட்டுமே ஜி.பி.எஸ்.தொழில்நுட்பத்தால் இணைக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணையத்தின் தர உறுதி பிரிவின் இயக்குநர் ஷெரின் அத்துகோரள தெரிவித்துள்ளார். (நி-4)

# முச்சக்கரவண்டி மோதி அரியவகை சிறுத்தை பலி



(களுத்துறை)

களுத்துறை வலல்லாவிட ஹொரவல- பெலவத்த வீதியின் லிஹினியா பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை முச்சக்கர வண்டியில் மோதி அரிய வகை சிறுத்தையொன்று உயிரிழந்துள்ளது.

இரண்டு அடி உயர மான குறித்த பெண் சிறுத்தையின் உடலை ஹிக்கடுவை வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் கடந்த டிசெம்பர் 3 ஆம் திகதி இதேபோல் ஒரு ஆண் சிறுத்தை வாகனத்தில் மோதி உயிரிழந்துள்ளது.

இந்த பிரதேசத்திற்கு அருகில் பாரிய வனப்பகுதி காணப்படுவதுடன், அதனை அண்மித்த பகுதிகளில் இந்த அரிய வகை சிறுத்தைகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்த சிறுத்தைகளை பாதுகாப்பதற்காக அப்பிரதேசத்தில் வன ஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகம் ஒன்று காணப்படாமை மிகப் பெரிய குறைபாடாக இருப்பதாக அப்பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். (நி-4)

# ஸ்புட்னிக் வி தடுப்பூசி 9.95 அமெரிக்க டொலர்

(கொழும்பு)

ரஷ்யா தனது "ஸ்புட்னிக் வி" கொவிட்-19 எதிர்ப்பு தடுப்பூசியை இலங்கைக்கு ஒரு டோஸ் 9.95 அமெரிக்க டொலருக்கு வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

மேலும் 6.5 மில்லியன் தடுப்பூசிகளை ரஷ்யாவிடமிருந்து வாங்குவதற்கான உத்தரவு விரைவில் வெளியிடப்படும் என்று ஆதாரங்களை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட ஒரு சிறப்பு தடுப்பூசி விலை குறித்து பேச்சுவார்த்தைக் குழு, ரஷ்யாவின் கமலேயா ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இலங்கையுடன் பேச்சுவார்த்தைகளை முடித்துவிட்டது.

தடுப்பூசியை ஒரு டோஸ் 9.95 க்கு வாங்க ஒப்புக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நபருக்கும் அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசிக்கு ஒத்த இரண்டு ஸ்புட்னிக் வி தடுப்பூசி டோஸ்கள் தேவைப்படுகிறது. (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2262

### மதி

**உலகம் அன்பான மனிதர்களால் உருவாகிறது...**



### லத்தீஸ்

**எல்லாத்தையும் மறந்திட்டு திட்டு வாங்கிறது ஆண்...**



**எல்லாத்தையும் ஞாபகம் வைச்சு திட்டுவது பெண்...!**

### சங்கீத்

**பெற்றோருக்கு பயந்து காதலை விட்ட காலம் போய்...**



**இப்போ பெற்றோலுக்கு பயந்து காதலை விடுகிறார்கள் இளைஞர்கள்...!**

### சாரா




### டினா

**இது தான் உண்மையான கல்வி...**



### மிது

**உன் துன்பத்தில் இல்லாத எந்த ஒரு உறவும்...**



**இன்பத்திலும் தேவையில்லை...!**

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நாணய இடமாற்று ஒப்பந்தத்தில் சீனா- இலங்கை கையெழுத்து

(கொழும்பு)

சீனா- இலங்கை ஆகிய இருநாடுகளும் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் நாணய இடமாற்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கி (சி.பி.எஸ்.எல்) மற்றும் பீப்பிள்ஸ் பாங்க் ஆப் சீனா (பி.பி.ஓ.சி) ஆகியவற்றுக்கு இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

மேலும் இரு நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, வர்த்தகம் மற்றும் நேரடி முதலீட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் குறித்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையில் அதிகளவு சீனப் பொருட்களே இறக்குமதி செய்யப்படுகின்றன.

அந்தவகையில் கடந்த 2020 ஆம் ஆண்டில், சீன இறக்குமதி 3.6 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்ததாக கணக்கிடப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களும் கையொப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இனவாதத்தை தூண்டும் கருத்துகள்

## அரசைச் சாடுகிறார் மனுஷ

(கொழும்பு)




ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு கருத்தைக் கூறும் அரசாங்கம், உள்நாட்டில் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இனவாதத்தை தூண்டும் வகையில் வேறு கருத்துக்களை கூறுகின்றது. அரசாங்கத்தின் இதுபோன்ற இரட்டை கொள்கைகள் வெட்கப்பட வேண்டியவை என்று பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று பிடிவாதமாகக் காணப்பட்ட அரசாங்கம் ஜெனிவா சிக்கலை தீர்த்துக் கொள்வதற்காக அதன் தீர்மானத்தை மாற்றிக் கொண்டுள்ளது.

இதே போன்று மாகாணசபை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளாமல் தேர்தலை நடத்த முடியாது என்பதில் உறுதியாகக் காணப்பட்ட அரசாங்கம் இந்தியாவின் அழுத்தம் காரணமாக தேர்தலை நடத்துவதற்கு அவசரப்படுகிறது.


புர்காவை தடை செய்ய தீர்மானித்துள்ளதாக அமைச்சர் சரத் வீரசேகர அறிவித்தார். எனினும் ஜெனிவா நெருக்கடியை கருத்தில் கொண்டு அவ்வாறான தொரு தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் இது போன்ற இரட்டை கொள்கைகள் வெட்கப்பட வேண்டியவை. ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகளின்ஆதரவைப்பெற்றுக் கொள்வதற்காக ஒரு கருத்தினைக் கூறும் அரசாங்கம், உள்நாட்டில் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இனவாத கருத்துக்களையும் கூறுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம் என மனுஷ தெரிவித்தார். (நி-4)

## சர்வதேச விமான நிலையம்

# மீண்டும் தாமரை இலைகளாக மாறும் விமான நிலைய பயணிகள் முனையம்

(கொழும்பு)



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது பயணிகள் முனையத்தை தாமரை இலைகளாக மாற்ற அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த தாமரை இலையை மறுவடிவமைக்க சுமார் ரூ .35 மில்லியன் செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இவ்விடத்தில் தாமரை இலை வடிவமே இருந்தது. எனினும் நல்லாட்சி அரசாங்கம் இதை அரலி இலை வடிவத்திற்கு மாற்றியது.

இந்த பயணிகள் முனையம் முன்னதாக தாமரை இலையின் வடிவத்தில் மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டு இருந்தது. ஆனால் அரலி இலையின் வடிவத்திற்கு மாற்றியதன் மூலம் அது பாழடைந்தது, கலை இழந்தது என விமான நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மேடைப் பேச்சு

நிறைய பேருக்குக் கூட்டத்திலே பேசுவது என்றால் பயம். நமக்கு ஒன்றும் தெரியாது என்று மற்றவர்கள் நினைத்து விடக் கூடாது என்ற எண்ணம் தான் இதற்குக் காரணம்.

மிகவும் முக்கியமான கூட்டம் என்றால் பயமும் அதிகமாக இருக்கும். முக்கியமானவர்களெல்லாம் வருவார்களே அவர்களெல்லாம் நம்மைப்பற்றி மட்டமாக நினைப்பார்களே என்ற பயம் வந்து விடும்.ஆனால் மேடைப் பேச்சு என்பது அவ்வளவு கடினமான காரியம் இல்லை என்கிறார்கள் அது சம்பந்தமான நிபுணர்கள்.யாரும் பேச்சாளர் ஆகலாம்... இது ஒன்றும் பெரிய gift இல்லையென்கிறார்கள் அவர்கள்!.

நீங்கள் ஒரு சிறந்த பேச்சாளராக ஆக வேண்டுமா?அப்படியென்றால் அதற்கென்று சில ஆலோசனைகளைச் சொல்கிறார்கள் அனுபவசாலிகள். முதல் ஆலோசனை என்னவென்றால் உங்களுடைய பேச்சு எளிமையாக இருக்க வேண்டும். ஏதாவது ஒரு கருத்து அல்லது இரண்டு கருத்து சொன்னால் போதும். 20 அல்லது 30 கருத்துக்களைச் சொல்லிக்கொண்டே போகக் கூடாது.

இரண்டாவது ஆலோசனை... நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள் என்பது உங்களுக்கு முதலில் நன்றாகப் புரிய வேண்டும். அப்போது தான் அடுத்தவர்களுக்குப் புரியும்.எப்படி ஆரம்பிக்கப் போகிறோம் ... என்ன கருத்தை முக்கியமாக வலியுறுத்தப் போகிறோம்... எப்படி முடிக்கப் போகிறோம்.. என்பதை முதலிலேயே நன்றாக சிந்தித்து வைத்துக்கொள்ள வேண்டும். கடைசியாக என்ன சொல்கிறீர்களோ அது தான் கேட்பவரது மனதில் நிற்கும்.

மூன்றாவது ஆலோசனை : உங்களுடைய பேச்சு சுருக்கமாக இருக்க வேண்டும்.ஒரு 15 நிமிடம் பேசுவது மிகவும் பொருத்தம். மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல.

நான்காவது ஆலோசனை : நீங்கள் பேசுவது உண்மையாக இருக்க வேண்டும்.உங்களுடைய உண்மையான அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

ஐந்தாவது ஆலோசனை : ஆரம்பத்திலே கொஞ்ச நேரம் உங்களைப் பற்றியும் எதிரிலே உள்ளவர்கள் பற்றியும் சம்மந்தப்படுத்தி ஏதாவது பேசி ஒரு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஒவ்வொருத்தரும் ....இப்பொழுது இவர் பேசப் போவது நம்மளையப்பற்றி என்று நினைக்க ஆரம்பித்து விடுவார்கள்.கேட்பதற்கு தயாராகி விட்டார்கள் என்று அர்த்தம்.

எதிரிலே உட்கார்ந்திருக்கின்ற கூட்டத்திலே இருந்து மூன்று பேரை தேர்ந்து எடுத்தார்கள்.வலது பக்கம் ஒருத்தர்–நடுவிலே ஒருத்தர் – இடது பக்கம் ஒருத்தர் உங்களை கனிவாகவும் ஆர்வமாகவும் பார்க்கின்றவராக பார்த்து தேர்ந்து எடுக்கவேண்டும்.

பேசும் போது இவர்களை நேருக்கு நேராக மாறி மாறிப் பார்த்துக் கொண்டே பேசினீர்கள் என்றால் நீங்கள் ஏதோ ஒட்டு மொத்தக் கூட்டத்தையும் பார்த்துப் பேசுகின்ற ஓர் உணர்வை ஏற்படுத்தி விடுமாம்.

ஆறாவது ஆலோசனை என்னவென்றால்....சொற்பொழிவு என்றால் நீங்கள் பேச வேண்டும்.படிக்கக்கூடாது.எழுதிப்படிப்பது நன்றாக இருக்காது.குறிப்புக்கள் வேண்டும் என்றால் வைத்துக் கொள்ளலாம்.படிப்பது பேப்பரில் வருவது போல இருக்கும்.பேசுவது .... இதயத்தில் இருந்து வருவது போல இருக்கும்.

ஏழாவது ஆலோசனை என்னவென்றால் மேடையிலே ஏறி நின்றவுடனே இயல்பாக மூச்சை இழுத்து விட்டுக்கொள்ளுங்கள். ... இயல்பு நிலைக்கு வாருங்கள்..அதன் பின் இயல்பாக பேச ஆரம்பியுங்கள்.

இவைஅனைத்தும் பேச்சுக்கலையில் வல்லுநர்களாக இருக்கிறவர்கள் சொல்லுகின்ற ஆலோசனைகள். இதையெல்லாம் கடைப் பிடித்தால்.... நமக்கும் அதற்கும் வெகுதூரம் என்று நினைத்துக் கொண்டிருந்த ஒன்று நமக்கு அருகில் நெருங்கி வந்து விடும்... நாம் சொல்கின்றபடி எல்லாம் அது கேட்கும்.

ஒரு பேச்சாளர் அவருக்கு சுருக்கமாகவே பேசத் தெரியாது. ... மேடையில் ஏறிவிட்டால் போதும் ... ஆரம்பித்து விடுவார்.. நிறுத்தவே மாட்டார். பேசிக்கொண்டே இருப்பார். ஒரு தடவை அவர் கூட்டத்தில் ரொம்ப நேரம் பேசிக்கொண்டே இருந்தார்.

எதிரிலே பொறுமையிழந்த ஒருத்தர் தன்னுடைய கைக் கடிகாரத்தைக் காட்டினார்.அதைக் கவனித்த பேச்சாளர் ''மன்னிக்க வேண்டும்... கைக்கடிகாரம் கொண்டுவர மறந்து விட்டேன் ... அது தான் நேரம் போனதே தெரியவில்லை! ''என்றார்.

இதற்கு அவர்.... " கடிகாரத்தைத் தான் பார்க்க முடியவில்லை... பக்கத்திலே மாட்டியிருக்கின்ற கலண்டரையாவது பார்க்கலாமே?'' என்றார்.

# 14 புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில. அளவையாளர் நாயகம்.

**வாக்கெண்ணும் நிலையங்கள் எவ்வாறு அமைத்துக் கொள்ளப்படும்?**

(வாக்களிப்பு முடிந்ததும் மாலை 4 மணிக்கு பிறகு அனைத்து வாக் களிப்பு நிலையங்களும் வாக்கு எண் ணும் நிலையங்களாக மாறி விடும். மாலை 4 மணிக்கு பிறகு வாக்குகள் எண்ணப்படும். காலையிலிருந்து மாலை வரை வாக்களிப்பு உத்தி யோகத்தர்களாக இருந்தவர்கள் மாலை 4 மணிக்குப் பிறகு வாக்கு எண்ணும் உத்தியோகத்தர்களாக மாறிவிடுவர். அந்த இடத்திலேயே வாக்குகள் எண்ணப்படும்.

அதாவது ஒரு வட்டாரத்திற்கு ஒரு வாக்களிப்பு நிலையம் அமைந் திருக்குமிடத்து அதே வாக்களிப்பு நிலையத்தில் வாக்கெண்ணல் நடத்தப்படும். ஒரு வட்டாரத்தினுள் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்களிப்பு நிலையங்கள் அமைந்திருக்கு மிடத்து, தெரிவத்தாட்சி அலுவலரால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு வாக் களிப்பு நிலையத்திலோ, அல்லது வாக்களிப்பு நிலையங்களிலோ வாக்குகள் எண்ணப்படும்.

**வட்டார முடிவு உடனடியாக அறிவிக்கப்படும்**

அதன்படி வாக்குகள் எண்ண ப்பட்டு அந்த வட்டாரத்தில் எந்தக் கட்சி வெற்றி பெற்றுள்ளது என உயர் அதிகாரி அறிவிப்பார். அதன்படி வெற்றி பெற்ற கட்சியின் சார்பில் குறித்த வட்டாரத்தில் போட்டியிட்டவர் வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ள ப்படுவார். முன்னர் கூறியது போல் சிலவேளை ஒரு வட்டாரத்திற்கு இர ண்டு மூன்று வாக்களிப்பு நிலை யங்கள் உருவாக்கப்படலாம். அப்படி யான சந்தர்ப்பம் வந்தால் அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் வாக் குகள் எண்ணப்பட்டு ஒன்றாக சேர்க் கப்பட்டு வெற்றி பெற்ற கட்சி அறிவிக் கப்படும். அது மட்டுமல்ல அந்த வட் டாரத்திற்கு வழங்கப்பட்டுள்ள தபால் வாக்குகளும் சேர்க்கப்பட்டு முழுமை யாகவே எண்ணப்படும்.

**இந்த தேர்தல் முறையின் கீழ் உறுப்பினர்களைத் தேர்ந்தெடு த்து நியமிப்பது எவ்வாறு?**

இந்தத் தேர்தல் முறையின் கீழ் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் போது முக்கியமாக நான்கு விடயங் கள் சம்பந்தமாக கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

- ஒருமை வட்டாரமட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்
- பன்மை வட்டார மட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்
- விகிதாசார அடிப்படையில் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.
- பெண் உறுப்பினர் எண் ணிக்கையைத் தீர்மானித்தல்.

இவற்றை தேர்தல்கள் ஆணைக் குழுவின் இணையத்தில் உள்ள உதாரணங்கள் மூலம் விளக்கு வதனால் புரிந்து கொள்வதற்கு இலகுவாக அமையும்.

உதாரணம்-:

A என்னும் உள்ளூராட்சி சபை ஒன்றில் ஒருமை வட்டார மட்டத் திலான 14 வட்டாரங்களையும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட பன்மை வட்டார மட்டத்திலான 01 வட்டாரத்தையும் கொண்டுள்ளது. இந்த பிரதேச சபைக்காக X , Y, Z என்னும் மூன்று அரசியல் கட்சிகள் போட்டியிட்டன என நாம் உதார ணமாக எடுத்துக் கொள்வோம். அக் கட்சிகள் பெற்ற வாக்குகளும் வெற்றி பெற்ற வட்டாரங்களும் அட்ட வணை 7 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை-7 X,Y,Z கட்சிகள் பெற்ற வாக்குகளும் வெற்றிபெற்ற வட்டாரங்களும்

| வட்டாரம் | பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | அளிக்கப்பட்ட வாக்குகள் (70%) | பெற்றுக் கொண்ட வாக்குகள் | | | வட்டாரத்தில் வெற்றியீட்டியது | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | X கட்சி | Y கட்சி | Z கட்சி | X கட்சி | Y கட்சி | Z கட்சி |
| 01 | 4500 | 3150 | 1638 | 1166 | 346 | 01 | - | - |
| 02 | 5200 | 3640 | 1893 | 1347 | 400 | 01 | - | - |
| 03 | 6600 | 4620 | 1710 | 2402 | 508 | - | 01 | - |
| 04 | 5000 | 3500 | 1820 | 1295 | 385 | 01 | - | - |
| 05 | 6000 | 4200 | 1554 | 2184 | 462 | - | 01 | - |
| 06 | 4900 | 3430 | 1784 | 1269 | 377 | 01 | - | - |
| 07 | 7250 | 5075 | 2639 | 1878 | 558 | 01 | - | - |
| 08 | 4750 | 3325 | 1729 | 1230 | 366 | 01 | - | - |
| 09 | 5200 | 3640 | 1893 | 1347 | 400 | 01 | - | - |
| 10 | 4100 | 2870 | 1492 | 1062 | 316 | 01 | - | - |
| 11 | 4600 | 3220 | 1675 | 1191 | 354 | 01 | - | - |
| 12 | 5100 | 3570 | 1856 | 1321 | 393 | 01 | - | - |
| 13 | 6300 | 4410 | 1632 | 2293 | 485 | - | 01 | - |
| 14 | 4200 | 2940 | 1529 | 1087 | 323 | 01 | - | - |
| 15பன்மை வட்டாரம் | 8500 | 5950 | 3094 | 2202 | 654 | 02 | - | - |
| மொத்தம் | 82200 | 57540 | 27938 | 23274 | 6327 | 13 | 03 | 00 |

**I.ஒருமை வட்டார மட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.**

ஒருமை வட்டார மட்டத்திலான வட்டாரத்தின் சகல வாக்களிப்பு நிலையங்களினதும் வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர் ஆகக் கூடிய வாக்குக்களைப் பெற்ற கட்சி அல்லது குழு சார்பாக தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர் குறித்த வட்டாரத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க ப்படுவார்.

இதன் பிரகாரம் மேலே உதார ணத்தில் (அட்டவணை 7 இல்) காட் டப்பட்டுள்ளவாறு X கட்சியானது 1,2, 4,6,7,8,9,10,11,12,14 ஆகிய ஒருமை வட்டாரங்களில் வெற்றியீட்டியுள்ளத னால் அக்கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்ட குறித்த அபேட்சகர்கள் அவ்வட்டாரங்களின் உறுப்பினர்க ளாகத் தெரிவு செய்யப்படுவதுடன் கட்சி 3,5,13 ஆகிய வட்டாரங்களில் வெற்றியீட்டியுள் ளதனால் அக்கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்ட குறித்த அபேட்சகர்கள் அவ்வட்டா ரங்களின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர். Z கட்சி எதுவித வட்டாரத்திலும் வெற்றியீட்டாத காரணத்தினால் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட மாட்டார்கள்.

**II.பன்மை வட்டார மட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.**

பன்மை வட்டாரமொன்றில் ஆகக் கூடியவாக்குகளைப் பெற்றுக் கொள் ளும் அரசியல் கட்சி அல்லது சுயேட் சைக் குழு சார்பாக தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்கள் இருவர் அல்லது மூவர் அவ்வட்டாரத்தின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக் கப்படுவர்.

இதன் பிரகாரம் மேலே உதார ணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு X கட்சியானது 15 என்னும் பன்மை வட்டாரத்தில் வெற்றியீட்டியுள்ள தனால், அக்கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்ட குறித்த அபேட்சகர் கள் இருவரும் அவ்வட்டாரத்தின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் படுவர்.

**III. விகிதாசார அடிப்படையில் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.**

உள்ளூராட்சி அதிகார சபை ஒன்றின் நிர்வாகப் பிரதேசத்தின் சார்பாக தேர்தலில் போட்டியிட்ட சகல அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் மொத்தக் கூட்டுத் தொகையை குறித்த உள்ளூராட்சி அதிகார சபைக்காக தேர்ந்தெடுக்கப் படவுள்ள உறுப்பினர் எண்ணிக் கையால் பிரிக்கப்பட்டுவரும் சராசரி அளவு தீர்க்கமான மதிப்பு ஆகும்.

இந்தத் தீர்க்கமான அளவினால் ஒவ்வொரு அரசியல் கட்சியும் சுயேட் சைக் குழுவும் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகள் பிரிக்கப்படும் பொழுது குறித்த அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழுவுக்கு உரிய முழு உறுப்பினர் எண்ணிக்கை தீர்மா னிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் சுயேட்சைக் குழுவுக்கும் உரிய உறுப்பினர் எண்ணிக்கையிலி ருந்து அவர்கள் வட்டார மட்டத்தில் பெற்றுக் கொண்ட உறுப்பினர் எண்ணிக்கையைக் கழித்துவரும் எஞ்சிய எண்ணிக்கை குறித்த ஒவ் வொரு அரசியல் கட்சிக்கும் சுயே ட்சைக் குழுவுக்கும் உரிய விகிதாசார அட்டவணைக்குரிய உறுப்பினர் எண்ணிக்கையாகக் கருதப்படும்.

ஏதேனுமொரு அரசியல் கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவிற்கு உரிய குறித்த எஞ்சிவரும் எண் ணிக்கை ஒற்றை மதிப்பெண்ணாக இருப்பின், அதாவது விகிதாசார முறைக்கு உரிய எண்ணிக்கை யிலும் விட வட்டார மட்டத்தில் தெரிவு செய்யப்படும் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அந்த மேலதிக எண்ணிக்கைக்குச் சம மாக உள்ளூராட்சி அதிகார சபை க்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப் பினர் எண்ணிக்கையும் அதிக மாகும். (Over Hang).

(தொடரும்)

# ஜெனிவாவில் கையெழுத்திட்டிருந்தால்
## தப்பிக்கவே முடியாது-கிரியெல்ல எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் கையெழுத்திட்டிருந்தால் அதற்கேற்ப செயற்பட வேண்டுமே தவிர தன் விருப்பத்திற்கேற்ப அரசாங்கத்தால் செயற்பட முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எச்சரிக்கை விடுத்துள்ளார்.



கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

அரசாங்கம் மாத்திரமல்ல நாமும் எமது நாட்டை நேசிக்கின்றோம். எனவே உண்மையில் நாட்டை நேசிப்பதாயின் சர்வதேச சமூகத்துடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஆனால் தற்போது அரசாங்கத்திற்கு முகவரியும் இல்லாமல் போயுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் கையெழுத்திட்டிருந்தால் அதற்கேற்பவே செயற்பட வேண்டும். மாறாக அரசாங்கத்திற்கு அதன் விருப்பத்திற்கேற்ப செயற்பட முடியாது. ஊடக சுதந்திரம், ஜனநாயகம் என்பவற்றை பாதுகாக்க வேண்டும். இறையாண்மை எனக் கூறி இவற்றின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்க முடியாது.

எதிர்க்கட்சியுடன் கூட தொடர்பாடல்களை முன்னெடுக்காத அரசாங்கம் எவ்வாறு சர்வதேசத்துடன் அதனைப் பேணும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (நி-4)

# ஆலய வழிபாடு
## ஏன்–எதற்கு – எப்படி



### தீபம் ஏற்றுவதன் தத்துவம்

(தொடர்ச்சி)

அகல், எண்ணெய், திரி, சுடர் ஆகிய நான்கும் சேர்வதே விளக்காகும். இவை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் குறிக்கும்.

இவையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு சாதனங்களும் ஆகும். இதனைக் கொண்டே நாம் ஆன்ம ஒளியைப் பெற வேண்டும் என்பதே விளக்கின் தத்துவம்.

விளக்கின் அடிப்பாகம் நமது உடலின் தொப்புளுக்குக் கீழ் உள்ள மூலாதாரம், விளக்கின் தண்டு முதுகுத்தண்டு வழியே மேல் நோக்கிச் செல்லும் சூட்சுமநாடி கழுத்துக்கு மேற்பட்ட பகுதியே குத்துவிளக்கின் தீபம்.

ஆன்மாவுக்கும் ஆண்டவனுக்கும் இடையில் உள்ள உறவை விளக்குகள் உணர்த்துகின்றன.

விளக்கு உடலாகவும் நெய் உணர்வுகளாகவும் திரிகள் ஆன்மாவாகவும் சுடர் ஆன்ம ஒளியாகவும் திகழ்கின்றன. விளக்கின் சுடரை ஏற்றும் மற்றொரு சுடர் இறையருள் ஒளியாக உள்ளது.

எந்த விளக்கும் தானே எரியாது சுடரைத் தூண்டக்கூடிய மற்றொரு சுடர் நிச்சயம் தேவை. அதைப் போல எந்த ஆன்மாவும் தானே முக்தியடைய முடியாது. அதற்குத் துணை செய்ய இறையருள் ஒளி தேவை.

இறையருள் ஒளி ஆன்மாவுக்குக் கிடைக்கும் போது கிளர்ந்தெழுகின்ற ஆன்மா தானும் சுடராய்ப் பிரகாசிக்கின்றது.

இந்த உயர்ந்த நிலையை அடைவதற்கு விளக்கும் (உடலும்) நெய்யும் (உணர்வுகளும்) திரிகளும் (ஆன்மாவும்) கச்சிதமாகப் பக்குவப்பட்டிருக்க வேண்டும்.

#### விளக்குப் பூஜைக்கு ஏற்ற நாட்கள்!

வெள்ளிக்கிழமை, கார்த்திகை, திருவாதிரை, பூசம், விசாகம், திருவோணம் ஆகிய நட்சத்திர நாட்கள், பௌர்ணமி, அமாவாசை, சதுர்த்தி, பஞ்சமி, ஏகாதசி ஆகிய திதிகளிலும் மற்றும் நவராத்திரி, சிவராத்திரி, ஆடிச் செவ்வாய், ஆடி, வெள்ளி, தைச் செவ்வாய், தை வெள்ளி ஆகிய நாட்கள் திருவிளக்குப் பூஜைக்கு ஏற்ற நாட்கள் ஆகும்.

வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் பெண்கள் கூட்டுப் பிரார்த்தனையாக விளக்குப் பூஜை செய்வது மிகுந்த நன்மையைத் தரும்.

#### பூஜைக்கு ஏற்ற விளக்குகள்!

பூஜை செய்யும் விளக்குகளில் வெள்ளி விளக்கு மிகச் சிறப்புடையது. ஐம்பொன் விளக்கு அடுத்துச் சிறப்புடையது.

வெண்கல விளக்கு அடுத்துச் சிறப்புடையது. பித்தளை விளக்கு அதற்கு அடுத்துச் சிறப்புடையது. அவரவர் விருப்பப்படியும் வசதிப்படியும் தீபங்களை அமைத்துக் கொள்ளலாம்.

மண் அகல் விளக்குகளை மாடத்தில் வைக்கவும். இவை அலங்கார பூஜைக்கும் கார்த்திகை தீபத்திற்கும் மற்றவற்றிற்கும் சிறப்புடையன. மாக்கல் விளக்கைத் தெய்வடாமத்தில் ஏற்றலாம்.

ஆனால் எக்காரணம் கொண்டும் எவர்சில்வர் விளக்கை பூஜைக்கோ வீடுகளில் ஏற்றுவதற்கோ பயன்படுத்தக் கூடாது. (தொடர்ச்சி)

# செய்தித்துளிகள்

## ராஜகிரியவில் விபத்து; பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு, ராஜகிரிய பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிக்கடை மேம்பாலம் மற்றும் ஆயுர்வேத சுற்றுவட்டத்திற்கு இடைப்பட்ட பகுதியில் வாகனங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உப பரிசோதகர் ஒருவரும் லொறியொன்றின் உதவியாளர் ஒருவருமே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவர் மீதும் வேகமாக பயணித்த வான் மோதியதன் காரணத்தினாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை வெலிக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

## நாடு திரும்பியவர்களில் 40 பேருக்குத் தொற்று

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களில் மேலும் 40 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (நி-4)

## தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய ஐவர் கைது-அஜித் ரோஹண

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகள் தொடர்பான கண்காணிப்பு பொலிஸாரால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதற்கமைய நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 140 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 180 | 200 |
| தக்காளி | 100 | 80 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 160 | 180 | 180 | 200 |
| பூசணி | 50 | 70 | 60 | 80 |
| புடோல் | 100 | 100 | 120 | 140 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 100-250 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 180 | 250 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 160 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 110 | -- | 160 |
| பயற்றங்காய் | 160 | 200 | 140 | 200 |
| லீக்ஸ் | 100 | 130 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 200 | 160 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 800 | 800 |
| போஞ்சி | 180 | 180 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 30-40 | 50 |
| தேசிக்காய் | 100 | 160 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 40-60 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 160 | 150 | 150 | 200 |
| முள்ளங்கி | 50 | 60 | 100 | 60 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | 140 | 100 | -- | 120 |

# கிளி.மாவட்டத்தில் 21 இறங்குதுறைகள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 21 இறங்குதுறைகளும் புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் காணப்படுவதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தில் காணப்படுகின்ற கரையோர இறங்குதுறைகள் மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுவதனால் மீன்பிடித் தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அண்மையில் வீசிய புரேவி புயல் காரணமாக இறங்குதுறை சேதமடைந்துள்ளதால் தங்களுடைய மீன்பிடி படகுகளை பாதுகாப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேற்படி திணைக்களம் குறிப்பிடுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் 21 இறங்கு துறைகள் உடனடியாக. புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன.

இவற்றை அபிவிருத்தி செய்வதற்கான திட்ட முன்மொழிவுகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதில் 5 துறைகள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு 4 இறங்குதுறைகளை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவுகள் முன்மொழியப்பட்ட போதும் அவை அபிவிருத்தி செய்யப்படவில்லை. அந்த நான்கு மீன்பிடி துறைகளுடன் மேலும் ஒருதுறையையும் இணைத்து முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளது. (5-4-315)

# நுண்கடன்களுக்கு எதிராக சுவரொட்டிகள்


(நெளுக்குளம்)

நாட்டில் சுமார் 24 இலட்சம் பேர் நுண்கடனால் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்து இதற்கு தீர்வு வழுங்கக்கோரி இம்மாதம் எட்டாம் திகதி பொலனறுவையில் சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக ஹிங்தாக்கொடவில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 16 ஆவது நாட்களாக சுழற்சி முறையில் இடம் பெற்றது.

இப்போராட்டத்திற்கு ஆதரவாக வவுனியா மன்னார் முல்லைத்தீவு , கிளிநொச்சி , திருகோணமலை , மட்டக்களப்பு போன்ற 16 மாவட்டங்களை உள்ளடக்கிய பிரதிநிதிகள் குறித்த போராட்டத்தில் பங்கேற்று வருகின்றனர்.

அந்தவகையில் வவுனியாவில் நேற்று பஜார் வீதி , நகரசபை வீதி, இறம்பைக்குளம் , குருமன்காடு ,போன்ற பகுதிகளில் "கொலைகார நுண்கடன் பொறிக்கு எதிரான போராட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது இதற்கு நுண்கடனால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஒன்றியம் உரிமை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது . (5-4-299)

# வீடு தீக்கிரை



(மன்னார்)

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள எமில் நகர் தோமையார் பகுதியில் உள்ள வீடு ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளது.

நேற்று முன்தினம் மதியம் குறித்த வீட்டில் திடீர் என தீப்பரவல் ஏற்பட்ட நிலையில் அயலவர்கள் அதன் உரிமையாளருக்கு தகவல் வழங்கினர்.

அயலவர்கள் மற்றும் கடற்படையினர் இராணுவத்தினர் மற்றும் மன்னார் நகரசபையிணைந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும் வீட்டிற்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன. குறித்த வீட்டில் வாடகைக்கு வசிப்பவர்கள் அயல் கிராமத்திற்கு இறப்பு வீடு ஒன்றிற்கு சென்றுள்ள நிலையில் குறித்த தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-285)

# உதவி செய்வதாக கூறியவர் தலைமறைவு

(வவுனியா)

வவுனியாவில் பெண் தலைமை குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காக கொழும்பிலிருந்து வந்துள்ளதாக சமூக அமைப்பிடம் தொடர்புகொண்ட ஒருவர் திடீரென்று தனது தொலைபேசியைத் துண்டித்து விட்டு தலைமறைவாகிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்திலுள்ள திணைக்களம் ஒன்றுடன் தொடர்பு கொண்ட நபர் ஒருவர் வவுனியாவிலுள்ள வசதியற்ற பெண் தலைமை குடும்பங்களுக்கு உதவி செய்வதற்கு தொடர்புகளை ஏற்படுத்தித்தருமாறு கோரியுள்ளார் .

இதையடுத்து வவுனியாவில் இயங்கிவரும் சமூக ஆர்வலர் அமைப்பு ஒன்றுடன் தொடர்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது இந்நிலையில் தொடர்பினை ஏற்படுத்தியவர் தான் கொழும்பிலிருந்து வந்துள்ளதாகவும் ஒரு பெயரை பயன்படுத்தி அந்த அமைப்பு என்று தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார் .

அவரது உரையாடலில் சந்தேகமடைந்து அவரிடம் மேலதிக தகவல்களை பெற்றுக் கொண்டபோது முன்னுக்குப் பின் முரண்பட்ட தகவல்களை வழங்கியதுடன் தற்போது இருக்கும் இடத்தினை உறுதிப்படுத்த தவறியதையடுத்து தொலை பேசி உரையாடல் நிறுத்தப்பட்டது.

இவ்வாறு போலியான தகவல்களை வழங்கி பெண் தலைமைத்துவ குடும்பங்களை ஏமாற்றுபவர் என்பது குறித்த சமூக அமைப்பினருக்கு புரிந்துள்ளது. (5-4-299)



உலக வளிமண்டல தினத்தினை முன்னிட்டு நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கரை வீதியில் அமையப்பெற்ற காலநிலை அவதானிப்பு நிலையம் வைபவ ரீதியாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் க.விமலநாதன் மற்றும் வளிமண்டல வியல் திணைக்கள பணிப்பாளர் அத்துள கருணாநாயக்க ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

(படம்- யதுபாஸ்கரன் .சப்த சங்கரி)

# விவசாயக்காணிகளை விடுவிக்க வேண்டும்

(முறிகண்டி)

எமது பிரதேசத்தில் உள்ள விவசாயிகளினதும், பொது மக்களினதும் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு பயிர்ச்செய்கை மேற்கொண்ட காணிகளை விடுவிக்க வேண்டும் என யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அங்கயன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆறுகளை பாதுகாப்போம் தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை பொதுமக்களின் விவசாயம் செய்த மற்றும் செய்யக்கூடிய காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இங்குள்ள மக்கள் விவசாயத்தை முன்னெடுத்து வருகின்றனர். ஏனைய பகுதி களில் இவ்வாறு விவசாயம் செய்யப்பட்ட காணிகளை விடுவிப்பது போன்று மற்றைய பகுதிகளில் உள்ள காணிகளையும் விடுவிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். (5-4-100)

# புகையிரதக் கடவை காப்பாளர்களது தேவைகளை நிவர்த்தி செய்ய கோரிக்கை

(பனிக்கன்குளம்)

புகையிரதக் கடவை காப்பாளர்களது அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்து அவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு புகையிரத கடவை காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் றெகான் ராஜ்குமார் முல்லைத்தீவில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்

மேலும் தெரிவிக்கையில் ,

கடந்த 16 ஆம் திகதி தலைமன்னாரில் இடம்பெற்ற விபத்தானது புகையிரத திணைக்களத்தின் முழுமையான பொறுப்புக்கூறலேயாகும்.

வடக்கு- கிழக்கில் புகையிரத கடவையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு புகையிரத திணைக்களத்தின் நேர அட்டவணை வழங்கப்படுவதில்லை. புகையிரத சமிக்ஞையினை காண்பிக்கும் சிறப்பு, பச்சை நிற கொடிகள் வழங்கப்படவில்லை. 2013 ஆம் ஆண்டு 180 நாட்கள் அரச சேவையில் பணியாற்றி இருந்தால் சேவையில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற சட்டத்திற்கமைய உள்வாங்கப்பட்ட புகையிரத கடவை பணியாளர்களுக்கு நாளாந்தம் 250 ரூபாவினை பொலிஸ் திணைக்களம் ஊடாக வழங்கப்படுகிறது.

எதிர்வரும் மாகாணசபை தேர்தலுக்கு முன்னதாக எங்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக நிரந்தர நியமனம் தொடர்பிலான நிலைப்பாட்டினை அரசு முன்வைக்க தவறும் பட்சத்தில் நாடு தழுவிய ரீதியில் இடைவிலகுவது தொடர்பாக கலந்தாலோசித்து வருகின்றோம் எனத்தெரிவித்தார். (5-4-281)

நீங்கள் ஈடுபடும் எந்த ஒரு செயலிலும் முழு விழிப் புணர்வோடு உங்கள் மனமும் செயலும் கலந்து ஒன்றி இருந்தால் அதுதான் உண்மையான தியானம்.
– ஓஷோ ரஜனீஷ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆளுநர் தலைமையில் அவசர மாநாடு கூட வேண்டும்

வட மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப் பாணத்தில் கொரோனாத் தொற்று வேகமெடுத் துள்ளது.

தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை களை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டாலும் கொரோனாத் தொற்று எல்லை கடந்து போவது தெரிகிறது.

இதைவிட, கொரோனாத் தொற்று பாடசாலை மாணவர்களிடம் பரவியுள்ளதென்பதுதான் பேர திர்ச்சியான தகவல்.

ஆம், யாழ்ப்பாணத்தில் உள்ள குறிப்பிட்ட பாட சாலை மாணவர்கள் சிலருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பாடசாலை மாணவர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பது ஒட்டுமொத்த மாணவர்களுக்கும் ஆபத்தைத் தரக்கூடியது.

இருந்தும் கொரோனாத் தொற்று ஏற்பட்ட மாண வர்கள் இருக்கக் கூடிய வகுப்புகளை மட்டும் தனி மைப்படுத்துவதனூடு கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேல் மாகாணத்தில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவியபோது, மேல் மாகாணப் பாட சாலைகள் முழுமையாக மூடப்பட்டிருந்தன.

இந்த நடைமுறை அங்கு இப்போதும் அமுலில் உள்ளது.

இதன்னால் மேல் மாகாணத்தில் கொரோனாத் தொற்றில் இருந்து மாணவர்களைப் பாதுகாக்க முடிந்தது.

ஆனால் வட மாகாணத்தில் சில மாணவர் களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில்,

அதனை ஒரு சாதாரண விடயமாகக் கருது கின்ற தோற்றம் தெரிகிறது.

எனவே கொரோனாத் தொற்றில் இருந்து வட பகுதி மாணவர்களைப் பாதுகாப்பதற்கான ஏற் பாடுகள் அவசரமாகச் செய்யப்பட வேண்டும்.

இதுவிடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் என்பன ஒன்று கூடி நிலைமைகளை ஆராய்வதும் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிப் பதும் அவசியமாகும்.

இதுவிடயத்தில் காலதாமதங்கள் ஏற்படுத்தப் படுமாயின் அதன் விளைவுகள் மிகப் பாரதூரமான தாக இருக்கும் என்பதுடன்,

தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பு வதில் பெற்றோர்கள் பின்னடிக்கின்ற சூழ்நிலையும் ஏற்படும்.

ஆக, யாழ்ப்பாணத்தில் சில மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று ஏனைய மாணவர்களுக்குப் பரவுவதைத் தடுப்பதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் அவசரமாகச் செய்ய வேண்டும்.

ஆகையால் இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் அவசர மாநாடு கூட்டப்படு வது காலத்தின் கட்டாயமாகும்.

# ஐ.நா ஆணையாளரின் அலுவலகங்கள் வடக்கு, கிழக்கில் அமைக்கப்பட வேண்டும்

### ஐ.நாவில் இணையவழி ஊடாக கருத்து தெரிவிக்கையில் சுரேஷ் தெரிவிப்பு

(ஜெனிவா)

இலங்கையில் கட்டமைக்கப்பட்ட தமிழ் இன அழிப்பைக் கட்டுப் படுத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிறுவப்பட வேண்டும்.

இவ்வாறு ஈ.பி. ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் முன்னாள்பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

பிரான்ஸில் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்பைப் பிரதிநிதித்துவப் படுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இணையவழி ஊடாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசேட அறிக்கையாளர் ஒருவர் இலங்கைக்கு நியமிக் கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இலங்கையில் சிங்கள அரசு 72 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களின் உரிமைகளை மீறி வருகின்றது எனவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

இதேநேரம், இலங்கை மீது பல்வேறு ஐ.நா. பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டு இருந்தாலும், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் எதையும் இலங்கை நிறைவேற்றத் தவறியுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படாத நிலையில், இராணுவத்தின் கட்டுப் பாட்டில் உள்ளன எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

# ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரு வெற்றி

### சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்திருக்கும் பாரிய வெற்றி என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் நிறைவேற்று இயக்குநர் கெனெத் ரொத் கூறியுள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் இது குறித்து மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை பாதிக்கப்பட்ட மக்களிற்கு பெரும் வெற்றியாகும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை 22க்கு 11 என்ற அடிப் படையில் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றங்களிற்கான எந்த பொறுப்புக் கூறலும் இல்லை என்பதை மனித உரிமை பேரவை அங்கீகரித்துள்ளதுடன் ராஜபக்ச அரசாங்கத்தை தொடர்ந்தும் கண்காணிக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** சமணன்குளம் கிராமம், சமயபுரம் கிராமம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** பூவரசங்குளம் கிராம்ம், செம்மண் தீவி லிருந்து நானாட்டான் வரை, செம்மண் தீவு **Ware House** ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

# நாலக கலுவேவ இராஜினாமா

(கொழும்பு)

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாலக கலுவேவ தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

நாலக கலுவேவ தனிப்பட்ட காரணங்களினால் பதவியை இராஜினாமாச் செய்ததாக வெகுஜன ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு 52 நாள் அரசியல் நெருக்கடி காலகட்டத்தில் குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)


# காற்று மாசு அதிகரிப்பு

(கொழும்பு)

கண்டி மற்றும் கொழும்பில் காற்று மாசுபாட்டின் அளவு அதிகரித்துள்ளது எனச் சுற்றுச்சூழல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்த காற்றின் தர அளவை விட இது அதிகளவில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார். (நி-4)

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

பிருந்தா: 'புத்தகமாவது, படிப்பதாவ்து! எல்லாம் அவர் நாக்கிலேயே நடனமாடுகின்றன.'

ம- படித்தவர். ஸ்ரீராமகிருஷ்ணர் புத்தகங்களே படித்ததில்லை என்று கேள்விப்பட்டபோது அவருக்கு வியப்பு உண்டாயிற்று.

ம-: 'சரி, இப்போது அவர் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன். நாங்கள் உள்ளே போகலாமா? நீ அவருக்குச் சற்று தெரிவிப்பாயா?'

பிருந்தா: 'நீங்கள் உள்ளே போகலாம், போய் உட்காருங்கள்.'

சிதுவும் ம-வும் உள்ளே சென்றனர். அறையில் வேறு யாரும் இல்லை. ஸ்ரீராமகிருஷ்ணர் மட்டும் தனியாக கட்டிலில் அமர்ந்திருந்தார். அறையில் தூபம் போடப்பட்டிருந்ததால் எல்லா கதவுகளும் மூடியிருந்தன. உள்ளே நுழைந்ததும் ம- கைகூப்பி ஸ்ரீராமகிருஷ்ணரை வணங்கினார். அவர் இருவரையும் உட்காருமாறு கூறினார். அவர்கள் தரையில் உட்கார்ந்தனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ம-விடம், 'நீ எங்கே வசிக்கிறாய்? என்ன செய்கிறாய்? வராக நகருக்கு என்ன விடயமாக வந்திருக்கிறாய்?' போன்ற கேள்விகளைக் கேட்டார்.

(தொடரும்)

# ரோஹிஞ்ய அகதி முகாமில் பாரிய தீ விபத்து

- ❖நால்வர் உயிரிழப்பு
- ❖நூற்றுக்கணக்கானோர் படுகாயம்
- ❖ஆயிரக்கணக்கான வீடுகள் தீக்கிரை



பங்களாதேஷின் தெற்கில் அமைந்துள்ள ரோஹிஞ்ய அகதிகள் முகாம் ஒன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆயிரக்கணக்கான வீடுகள் தீக்கிரையாகியுள்ளதுடன், நான்கு பேர் உயிரிழந்தும்உள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காக்ஸ் பஜாரின், உக்கியாவில் அமைந்துள்ள பலுகாலி அகதிகள் முகாமில் ஏற்பட்ட இந்த தீ விபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு ரோஹிஞ்யர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நூற்றுக்கணக்கானோர் பலத்த காயமடைந்துள்ளதாக ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. (நி-4)

## பல்பொருள் அங்காடியில் துப்பாக்கிச் சூடு 10 பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பல்பொருள் அங்காடியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொலராடோ மாகாணத்தில் போல்டர் என்ற இடத்தில் செயற்பட்டு வரும் கிங் சுப்பர் என்ற பல்பொருள் அங்காடியிலேயே இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றது. குறித்த பல்பொருள் அங்காடியில் நுழைந்த மர்ம நபரொருவர் தான் வைத்திருந்த துப்பாக்கியால் அங்கிருந்த பொது மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினார்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பொலிஸ் அதிகாரியொருவர் உட்பட 10 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த வாரம் அட்லாண்டாவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் கொல்லப்பட்ட நிலையில், மீண்டும் அதேபோன்ற சம்பவம் அங்கு நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஐரோப்பிய நாடுகளில் மீண்டும் ஊரடங்கு

(ஜெனிவா)

கொரோனா பரவல் அதிகரிப்பால் ரஷ்யா, பிரான்ஸ், போலந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

முதலில் இங்கிலாந்தில் மரபணு மாற்றமடைந்த கொரோனா பரவியது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அந்நாட்டில் மீண்டும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

அதேபோல் மரபணு மாற்றம் அடைந்த கொரோனா வைரஸ் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது.

பிரான்ஸ், இத்தாலி, ரஷ்யா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளில் வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்பும் அதிகரித்தன. இதனால் மீண்டும் வேகமாக பரவும் கொரோனா வைரஸை கட்டுப்படுத்த ஐரோப்பிய நாடுகள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. மக்களுக்கு தடுப்பு மருந்து செலுத்தப்பட்டு வந்தாலும் கொரோனா பாதிப்பு அதிகரிப்பதால் மீண்டும் ஊரடங்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. (நி-4)

# சமூக வலைத்தளங்களுக்கு திரும்பவுள்ள ட்ரம்ப்

(வோஷிங்டன்)

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விரைவில் தனது சொந்த தளத்துடன் சமூக வலைத்தளங்களுக்கு திரும்புவார் என அவரது ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

வோஷிங்டன் டி.சி.யில் உள்ள அமெரிக்க பாராளுமன்றம் அமைந்துள்ள கபிட்டல் கட்டடத்தில் ஜனவரி மாதம் நடந்த வன்முறைகளுக்கு பிறகு ட்ரம்ப்பின் டுவிட்டர் மற்றும் பேஸ்புக்கிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். (நி-4)


மின்மீன் விளையாட்டுக்கழகம்-வயாவிளான்

68 ஆவது ஆண்டு விழா

மீண்டும் மின்னத் தொடங்கியுள்ளது மன்றம்.

மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி 6 ஓவர்

1 ம் பரிசு ரொக்கம் 25000/- சுற்றுக்கிண்ணச் சம்பியன் கிண்ணம்

2ம் பரிசு ரொக்கம் 15000/- கிண்ணம்

3 ம் பரிசு ரொக்கம் 10000/- கிண்ணம்

சுப்பர் 8 பங்கு பெறும் கழகங்கள் அனைத்திற்கும் கிண்ணம்

விண்ணப்ப முடிவு திகதி 31.03.2021

துவிச்சக்கர வண்டி ஓட்டம் 30 மைல், மரதன் ஓட்டம் 10 கிலோ மீற்றர்

போட்டிகள் யாவும் வயாவிளான் மத்திய கல்லூரி மைதானம்.

பொதுச் சுகாதார விதிமுறைகள் முற்றாகப் பேணப்படும்.

தொடர்பு :சி.சிங்காராஜன் 077 625 8246 மு.சிறிதர் 077 584 2006

சி.சந்தணகுமாரன் 076 551 7346

நிர்வாகசபை,மின்மீன் விளையாட்டுக்கழகம், வயாவிளான்.

(6303)

## ஜெனிவாவில்...

னைக் கூறினார்.

14 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நிலையில், 25 நாடுகள் இந்த பிரேரணை தொடர்பிலான எதிர் நிலைப் பாட்டில் உள்ளமை வெளிப்படையாக தெரிவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரேரணையை கொண்டு வந்த நாடு களினால் மனித உரிமைகள் பேரவை யில் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியாமற் போனதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உயர் நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்ற கட்டமைப்பு மற்றும் ஜனாதிபதி ஆணைக் குழுக்களினால் நாட்டின் இறையாண்மை மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படு வதாகவும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக் கள் அனைவரும் ஒற்றுமையாக வாழக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

பிரித்தானியா கொண்டுவந்த தீர் மானம் மீது 47 நாடு களிடையே 22 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்டன. 25 வாக்குகள் பயன்படுத்தப்படவில்லை. அவற்றில் 11 நாடுகள் தீர்மானத்திற்கு எதி ராக வாக்களித்ததுடன், 14 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

அந்த வகையில் 25 நாடுகளின் அனு மதியினை பலம்வாய்ந்த நாடுகளால் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

## யாழ்.நகரின்...

பரிசோதனையில் 9 பேருக்கு கொரோ னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து மரக்கறி வியாபாரம், வெற்றிலை வியாபாரம் உட்பட்ட வியாபார நடவடிக்கைகள் நடைபெறும் பகுதி முடக் கப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மேலதிக தொற்றாளர்கள் விபரம்:

யாழ்ப்பாணம் ஆய்வுகூடங்களில் 600 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோத னைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 23 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறி யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட யாழ்.நகர் 2ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஒருவர்,

யாழ்.மாநகர எல்லைக்குள் 9 பேர் (தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்த வர்கள்) யாழ்.நவீன சந்தைத் தொகுதி யில் 60 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட எழு மாற்றான பரிசோதனையில் 9 பேருக்கு தொற்று (மூவர் பனை உற்பத்தி பொருட் கள் வியாபாரிகள், மூவர் மரக்கறி வியா பாரிகள்) கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவர் (காரைநகர் பேருந்து சாலை ஊழியர்களின் உற வினர்கள்)

மன்னார் நகர் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் ஒருவர், கிளிநொச்சி கண்டாவளையில் ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப் பட்டுள்ளனர். (ம-3,18,33,316)

## இலங்கை விடயத்...

மூர்கள் சமத்துவம், நீதி, கண்ணியம், அரசியல் உரிமைகளு டன் அமைதியாக வாழ்வதை உறுதிசெய்யும் அதேவேளை, இலங்கையின் ஒற்றுமை, ஸ்திரத்தன்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை உறுதி செய்யும் இரட்டைக் கடப்பாடுகளை இந்தியா கொண்டுள்ளது என ஜெனிவா வில் வாக்கெடுப்புக்கு முன்னர் நேற்று பேசிய இந்தியாவின் பிரதிநிதி தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் நேற்று கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் இருந்து இந்தியா வாக்களிக்காமல் விலகி நடுநிலை வகித்தது.

இந்நிலையில் வாக்கெடுப்புக்கு முன் னர் அங்கு பேசிய இந்தியாவின் பிரதிநிதி அண்டை நாடான இலங்கையில் 2009 யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் மீள்குடி யேற்றம், புனர்வாழ்வு மற்றும் புனர மைப்பு பணிகளுக்கு இந்தியா பங்களிப்பு செய்துள்ளதாக தெரிவித்தார்.

எங்கள் அபிவிருத்தி உதவிகள் இலங் கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களில் பாதிக்கப்பட்டவர்களின் வாழ் வாதாரங்களை மீட்டெடுப்பது மற்றும் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படுத்து வதை நோக்கமாகக் கொண்டிருந்தது என அவர் தெரிவித்தார்.

அத்துடன், மாகாண சபைகளுக்கான தேர்தல்களை விரைவாக நடத்துவதன் மூலமும் அனைத்து மாகாண சபைகளும் திறம்பட செயற்படுவதை இலங்கை உறுதி செய்ய வேண்டும்.

இலங்கையில் அதிகாரப் பகிர்வை உறுதி செய்ய வேண்டும் என சர்வதேச சமூகத்தின் அழைப்பை இந்தியா ஆதரிக் கிறது. இலங்கை அரசியலமைப்பின் 13 வது திருத்தம் முழுமையாக நிறைவேற் றப்பட வேண்டும் என இந்தியா எதிர்பார்க் கிறது எனவும் இந்தியாவின் பிரதிநிதி கூறினார். (ம-3)

## இலங்கைக்கு...

மணியளவில் பிரிட்டனினால் தீர்மான வரைவு வாக்கெடுப்புக்கு முன்வைக்கப் பட்டது.

**தீர்மானத்திற்கு ஆதரவாக**

ஆர்ஜென்ரீனா, ஆர்மேனியா, ஆஸ் திரியா, பஹமாஸ், பிரேசில், பல்கேரியா, ஐவரிகோஸ்ட், செக் குடியரசு, டென்மார்க், பிஜி தீவுகள், பிரான்ஸ், ஜேர்மனி, இத் தாலி, மலாவி, மார்ஷல் தீவுகள், மெக் சிக்கோ, நெதர்லாந்து, போலந்து, கொரியா, உக்ரைன், பிரித்தானியா மற்றும் உரு குவே ஆகிய நாடுகள் வாக்களித்துள்ளன.

**தீர்மானத்திற்கு எதிராக**

பங்களாதேஷ், பொலிவியா, சீனா, கியூபா, எரித்திரியா, பாகிஸ்தான், பிலிப் பைன்ஸ், ரஷ்யா, சோமாலியா, உஸ் பெகிஸ்தான் மற்றும் வெனிசுவேலா ஆகிய நாடுகள் வாக்களித்துள்ளன.

இதேவேளை இந்தியா, பஹ்ரைன், புர்கினாஃபசோ, கெமரூன், கெபோன், இந்தோனேசியா, ஜப்பான், லிபியா, மொரிட்டானா, நமீபியா, நேபாளம், செனகல், சூடான், ரோகோ ஆகிய நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஒன்றிணைந்த குழு சமர்ப்பித்த தீர் மானம் மீதான வாக்கெடுப்பை சீனா கோரி யது.

இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரங்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆறாவது தீர்மானம் இதுவாகும். (ம-3)

## நல்லூரைச்...

எது.

அந்தவகையில் யாழ்ப்பாணம், நல் லூரைச் சேர்ந்த 63 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் மொத்த எண் ணிக்கை 552 ஆக அதிகரித்துள் ளமை குறிப்பிடத் தக்கது. (ம-3)

## ஐ.நா...

விளைவிக்கும் என ஐ.நாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி சி.ஏ. சந் திரபிரேமா தெரி வித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை விவாதத் தில் நேற்று இலங்கை சார்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக் கும்போதே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

புதிய தீர் மானத்தை வழக் கம்போல இல ங்கை நிராகரிப் பதாக அவர் இதன் போது தெரிவித் திருந்தார்.

எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேர வையில் இலங்கை தொடர்பாக கொண்டு வரப்பட்டுள்ள பிரே ரணைக்கு ஆதர வாக 21 நாடுகளும் எதிராக 11 நாடு களும் வாக்களித்

# ஜெனிவாவில் பதிலளிக்க 3 நிமிடங்களே

## இலங்கை அதிருப்தி

(ஜெனிவா)

ஜெனிவாவில் இலங்கை மீதான பிரே ரணைக்குப் பதிலளிப்பதற்காக மூன்று நிமிடங்களே வழங்கப்பட்டுள்ளன என வும், அது தொடர்பான தமது அதிருப் தியை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அறிவித்துள்ளோம் எனவும் வெளிவிவ கார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இலங்கை மீதான பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள தக வல்கள் உண்மைக் குப் புறம்பானவை, ஆதாரமற்றவை என்றார். (ம-3)

திருந்தன.

அத்துடன் இந்தியா உட்பட 14 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## யாழில் மாணவர்...

இத்தகவல் கசியத் தொடங்கியதும் குறித்த பாடசாலையில் மாணவர்களின் வரவு கணிசமாகக் குறைவடைந்ததுடன் ஆசிரியர்களும் பாடசாலைக்குச் செல்லா மல் சொந்த லீவுக்கு விண்ணப்பித்துள்ள னர்.

இதனால் கொரோனாத் தொற்று இனங் காணப்பட்ட மாணவர்கள் படிக்கின்ற பாட சாலைகளை இயக்குவது கடினமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. (ம-3)


தன நிதானய
திகதி - 2021.03.23
சீட்டிழுப்பு இலக்கம் - 472
Z 04 39 71 78

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 23.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2730
L 18 21 33 80

மஹஜன சம்பத
திகதி 2021/03/23
சீட்டிழுப்பு இலக்கம் 4435
H 8 0 1 4 3 8

சுபிரி வாசனா
2021/03/23 1585
06 05 30 40 46

மெகா பவர்
திகதி 23/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0797
S 20 37 49 53 63

அத கோடிபதி
தினம்: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1231
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 23.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 120,778,465
17 21 31 59 P

சனிதா
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3561
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 23.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,992,554
24 25 47 60 S

ரஜ்
சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி: 23.03.2021
வெற்றி வாரம்: 3112
வர்ணம்: சிவப்பு
09 25 41 52 தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 47,413,633
சுப்பர் தனயோகத்தின் விசேட இலக்கங்கள் - 12339

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1405 நிறம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 23/03/2021 தினம் செவ்வாய்க்கிழமை
A 21 33 44 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் 50,406,602/=

ஜய
சீட்டிழுப்பு வாரம் 706
23.03.2021
H 24 38 49 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,313,075
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வேலை வாய்ப்பு

அரசாங்கத்தின் அனுமதி பெற்ற எமது கம்பனியின் யாழ். மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட கிளை நிறுவனத்திற்கு வேலை செய்ய 07 விதமான பதவி வெற்றிடத்திற்கு வேலையாட்களை இணைக்கவுள்ளோம். முதல் மாதம் 15,200/-, 2 ஆம் மாதம் 22,500/-, 3 ஆம் மாதம் 32,800/- வருமானமும் தகுதிகாண் காலத்தின் பின்னர் 45,800/- வருமானமும் பெற்றுக்கொள்ளமுடியும். O/L, A/L படித்த இளைஞர், யுவதிகள் 40 பேருக்கு வெற்றிடங்கள் உள்ளன. (6296)

தொடர்புகளுக்கு

077 062 1631, 021 722 3317


## வடமராட்சி வெற்றிலைக்கேணியில்

# 7 கோடியே 19 இலட்சம் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு - வெற்றிலைக்கேணி பகுதியில் சுமார் 7 கோடியே 19 லட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இருவர் கடற்படையினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெற்றிலைக்கேணி பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, சந்தேக நபர்களிடமிருந்து 239 கிலோ 850 கிராம் கேரள கஞ்சா போதைப் பொருள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கஞ்சா தொகையை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனம் ஒன்றையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவத்தில் 31 மற்றும் 34 வயதுடைய வெற்றிலைக்கேணி மற்றும் ஆழியவளை பிரதேசங்களைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களை பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-03)

## அதிகரிக்கும் மண்ணெண்ணெய் விலை?

(கொழும்பு)

இலங்கையில் மண்ணெண்ணெயின் விலையில் அதிகரிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் விலையை 10 வீதத்தால் அதிகரிக்க ஒப்புதல் கோரி எரிசக்தி அமைச்சகம் அமைச்சரவைக்கு அறிக்கை அளித்துள்ளது.

தற்போது ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் விலை 70 ரூபாய். 10%அதிகரிப்புக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தால், ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் விலை ரூ .77 ஆக உயரும். (ம-03)


in partnership with idp IELTS Register Here
Official IDP IELTS Referral Agent

Looking for a Desired BAND SCORE in IELTS EXAM



WHAT WE COVER
FREE ADMISSION
- IELTS Tips
- IELTS Exam tips by IELTS Experts
- Individual discussion

& College/University Admission For UK, Canada, USA and Australia
Career Guidance and other services

ApplyBoard

- Applyboard country representative Live Speaking in English & Tamil
- Individual discussion

27th March 2021
Green Grass Hotel
1.00 pm - 5.00 pm
Contact 0777516816 0741887878 (6293)

Limited Participants !!!
Refreshment Will Be Provided

## A/L தமிழ் - 2023

### பா.பத்மநாதன்

B.A (Hons) [Tamil Spl.]- 1st class, M.A (Tamil)- 1st class, M.Ed (Hons)- 1st class, Dip. in Ed. (6251)

C.C.A- சுன்னாகம் | சித்தி விநாயகர் - மல்லாகம்
மொடேண் - சண்டிலிப்பாய் | மகுடம் - உரும்பிராய்

ஆரம்பம் - 28.03.2021

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (6318)

## சோ(F)பா கிளீனிங்

தங்கள் கறைபடிந்த சோ(F)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புகளை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (6301)

077 224 2787


## மரண அறிவித்தல்

### நல்லையா நதீஸ்குமார்

பிறப்பு - 1979.04.16
இறப்பு - 2021.03.19



கோண்டாவில் கிழக்கு, சென். செபஸ்தியார் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியலினை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா நதீஸ்குமார் கடந்த 19.03.2021 (வெள்ளிக்கிழமை ) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயன் நல்லையா மற்றும் பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் இலட்சுமணன் (மன்னன்) - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் நுதாசினியின் அன்புக் கணவரும் சிரோமி, அஸ்வினி, சர்வின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரோஜினி (பதில் விடுதி இலிகிதர் - யாழ். போதனா வைத்தியசாலை), சதீஸ்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் புவீந்திரன் (பரிசாரகர் - யாழ். போதனா வைத்தியசாலை), ஸ்ரீபிரியா (கனடா), தீபா, உஷா (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெகதீஸ்வரன் (மேற்பார்வையாளர் - யாழ். மாநகர சபை), பதீஸ்ராஜா (ஆசிரியர்- உயரப்புலம் மெதடிஸ்த மிசன் பாடசாலை) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் யோசலா, அபிநாத், சேழினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிவேதா, ருபிஷன், பியஷான், தனுஜா, யதுசன், வருண் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.03.2021) புதன்கிழமை கனடா நேரம் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை (இலங்கை நேரம் பி.ப 11.30 தொடக்கம் மு.ப 2.30 மணிவரை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைகளுக்காக நாளை (25.03.2021) வியாழக்கிழமை கனடா நேரம் பி.ப 1.30 தொடக்கம் பி.ப 3.00 மணி வரை (இலங்கை நேரம் பி.ப 11.00 தொடக்கம் மு.ப 12.30 மணி வரை) limit relative. AETERNA Complexe funeraire 55, rue Gince, Montreal, Quebec H4N1J7 என்ற இடத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறிப்பு

அஞ்சலி நிகழ்வு, தகனக் கிரியை நிகழ்வு என்பன கீழ் குறிப்பிடும் இணைய வழி ஊடாக நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படும்.

Complexeaeterna.com User Name : Aeternaweb Password : 20210320D
http://complexeaeterna.com

சென். செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (6319)

தகவல்:- குடும்பத்தினர்


## வீடு விற்பனைக்கு

கூளாவடி லேன் ஆனைக்கோட்டையில் 4 3/4 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
( தரகர் தேவையில்லை ) (6302)

077 756 3041

## விற்பனைக்கு

58 தொடர் இலக்கமுடைய Hiace ரக van விற்பனைக்கு உண்டு. (6311)

077 711 0940

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள குளிர்பான நிலையம் ஒன்றிற்கு முன் அனுபவம் உள்ள (ஆண் / பெண் ) காசாளர், சிட்டை எழுதுனர் மற்றும் சிற்றுண்டி பரிமாறுபவர் (supplier) பெண் ஊழியர்கள் தேவை. (6306)

LINGAN CREAM HOUSE
No. 213, Stanley Road, Jaffna.

## பணிப்பெண் தேவை

கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.
[ கோண்டாவிலை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. ]
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (6315)

077 501 0821
076 135 9300

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதி, கோண்டாவில் கொட்டைக்காடு வீதியில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.)
பலாலி வீதியில் இருந்து 120 மீற்றர் தூரத்தில் காணி உள்ளது. (6321)

077 623 4204
077 505 8561
077 235 2656

## தேவை

சாவகச்சேரியில் ஆறு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றை பராமரிக்கக் கூடியவாறு / வேலை செய்யக் கூடியவாறு பெண் ஊழியர் ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (6310)

077 077 1377

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் - புத்தூர் - கோப்பாய்
- நெல்லியடி - கொடிகாமம் - மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு - சுன்னாகம் - கிளிநொச்சி
- பருத்தித்துறை - வல்வெட்டித்துறை - சாவகச்சேரி

0768226240 DHL (C-1767)

அண்ணா EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-1768)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.